REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2024 ஜூன் 8 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
92
1932–2024 ANNIVERSARY
வரு. 92 இல. 136 | Saturday 08, June, 2024 | 09பக்கங்கள் | 50/-

நிதி முகாமைத்துவ சட்ட மூலம்

## நாட்டின் வங்குரோத்து நிலையை இல்லாதொழிப்பதற்கான திட்டம்

**அமைச்சர் பந்துல சபையில் தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டின் வங்குரோத்து நிலையை இல்லாதொழிப்பதற்காகவே 06

## மின்சாரக் கட்டணக் குறைப்பு 40 இலட்சம் பேர் பயனடைவது உறுதி

**ஜூலை 01ஆம் திகதி முதல் அமுல்**



மின் கட்டணம் ஜூலை முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டதும் 68 இலட்சம் பாவனையாளர்களில் 40 இலட்சம் பேர், பயனடையவுள்ளதாக மின்சக்தி,வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியதாவது; மின்னுற்பத்திக்கான செலவுகளை ஈடு செய்யும் வகையில் மின்கட்டணம் திருத்தம் செய்யாமல் இருந்திருந்தால் மின்விநியோக கட்டமைப்பில் எழுந்த பிரச்சினைகளுக்கு இன்றும் தீர்வு 06

பொருளாதார மறுசீரமைப்பு சட்டமூலம்

## நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதைக்கு திருப்புவதற்கான முதல் கட்டம்

**Sands Active தனியார் மருந்து உற்பத்தி நிறுவன திறப்பு நிகழ்வில் ஜனாதிபதி**

பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலத்தை சமர்பித்து நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதைக்கு திருப்புவதற்கான முதல் அடி வைக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். எந்தவொரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், எந்த தலைவர் நாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்டாலும் மேற்படி 06



சவூதி அரசு இலங்கைக்கு சலுகை

## முப்படையிலுள்ள முஸ்லிம்களுக்கு இலவச ஹஜ் பயண வாய்ப்பு



ஸாதிக் ஷிஹான்

வரலாற்றில் முதல் தடவையாக, இந்த ஆண்டு (2024) ஹஜ் கடமைகளை மேற்கொள்ள இலங்கை முப்படையைச் சேர்ந்த முஸ்லிம் உறுப்பினர்களுக்கு வாய்ப்பை சவூதி அரசாங்கம் வழங்கியுள்ளது. பாதுகாப்பு 06

# இலங்கை கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு IMF வரவேற்பு

**சர்வதேச நாணய நிதியத்துடன் எதிர்வரும் 12ஆம் திகதி 02ஆம் கட்ட மீளாய்வுக் கூட்டம்**

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையில் வலுவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜூலி கோசாக் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்துள்ளார்.

வெளி வணிக கடன் வழங்குநர்களுடன் விரைவில் ஒப்பந்தங்கள் எட்டப்படுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அத்தோடு 2024 ஆண்டுக்கான IV ஆவது ஆலோசனையில் குறிப்பிட்டுள்ளபடி, ஜூன் 12 ஆம் திகதி நிர்வாகக் குழு இரண்டாவது மதிப்பாய்வு மற்றும் IV ஆலோசனையைப் பற்றி கலந்துரையாடவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் பாரிய பருவினப் பொருளியல் பொருளாதாரக் கொள்கை Macroeconomic policy சீர்திருத்தம் பலனளிக்கத் தொடங்கியிருப்பதைக் காணக்கூடியதாக இருப்பதாகவும் விரைவான பணவீக்க வீழ்ச்சி, வலுவான இருப்பு குவிப்பு, ஆகியவை பாராட்டத்தக்க விளைவுகளாவதுடன் பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப அறிகுறிகள், நிதி அமைப்பின் ஸ்திரத்தன்மையை இவை பாதுகாப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.



நிரல் செயல்திறன் மிகவும் வலுவானதுடன் இரண்டாவது மதிப்பாய்வுக்கான கட்டமைப்பு நிபந்தனைகள் தாமதத்துடன் எதிர்நோக்கப்பட்டது அல்லது செயல்படுத்தப்பட்டதாகவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. 06

## பிரதமர் மோடியின் பதவியேற்பு: நாளை புது டெல்லியில் ஏற்பாடு

**இன்றைய விழா பிற்போடப்பட்டது**



பிரதமராக நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பதவியேற்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெறுமென, தகவல்கள் வெளியாகியுள்ளன. பிரதமர் மோடி இன்று (08) பதவியேற்பாரென கூறப்பட்டபோதும், பல்வேறு காரணங்களால் இவ்விழா ஒருநாள் பிற்போடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.பதவியேற்பு விழாவில் தெற்காசிய தலைவர்கள் பலர் பங்கேற்பரென எதிர்பார்க்கப்படுகிறது. 06

அரச நிதிக் குழுவின் தலைவர்

## ஹர்ஷ டி சில்வா பதவி விலக வேண்டிய அவசியம் கிடையாது

**குழுவுக்கு வளங்களை பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்**

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியில் அரசாங்க நிதிக் குழுவின் பணிகள் இன்றியமையாதது. இதற்கான வளங்களைப் பெற்றுக் 06

## தேசிய நல்லிணக்க ஒருங்கிணைப்பாளர்களாக பாபு சர்மா, ஹஸன் மௌலானா






தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஒருங்கிணைப்பாளர்களாக (ONUR) கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா மற்றும் அஸ்ஸெய்யது ஹஸன் மௌலானா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்விருவரும் முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் இந்து மற்றும் முஸ்லிம் மத விவகாரங்களுக்கான இணைப்பாளர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. 06

## தொற்று நோயாக டெங்கு மாறக் கூடிய அபாயம்

**வைத்தியர் சுதத் சமரவீர எச்சரிக்கை**



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால், டெங்கு தொற்று நோய் மேலும் அதிகரிக்கக் கூடுமென, எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனால், நோய்ப் பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது மிக அவசியமென தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் (06) நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட விசேட வைத்தியர் கலாநிதி சுதத் சமரவீர இதனைக் குறிப்பிட்டார்.

## மாத்தளை, கொழும்பில் செயற்கை நவீன ஹொக்கி மைதானங்கள்

**ஜூலை 15க்கு முன்னர் திறப்பு; விளையாட்டில் புதிய யுகம் உருவாக்கப்படும்**



மாத்தளை செயற்கை ஹொக்கி மைதானத்தையும் கொழும்பு ரீட் மாவத்தையில் உள்ள செயற்கை ஹொக்கி மைதானத்தையும் 06



03

## IMF இன் மூன்றாம் தவணைக் கடன் பெறுவதில் எவ்வித சிக்கலும் இல்லை

மண்சரிவு அபாயம்

## கண்டி–கொழும்பு வீதியில் பஹல கடுகண்ணாவ பகுதி மூடும் வாய்ப்பு

கண்டி – கொழும்பு பிரதான வீதியின் பஹல கடுகண்ணாவ பகுதி இன்று (08) இடைக்கிடை மூடப்படவுள்ளதாக கேகாலை மாவட்ட செயலாளர் சந்தன ஜயசிங்ஹ தெரிவித்துள்ளார். இதன்படி, இன்று (08) முற்பகல் 10 மணி முதல் இரவு 07 மணி வரை வீதி மூடப்படுமென அவர் கூறினார். பஹல கடுகண்ணாவ பகுதியில் மண்சரிவு அபாயம் காணப்படுகின்ற பகுதிகளிலுள்ள கற் பாறைகள் மற்றும் மரங்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளுக்காகவே இந்த வீதி மூடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தொழிற்சங்கங்களுக்கு அடிபணிந்து நாட்டை ஆட்சி செய்ய முடியாது

லோரன்ஸ் செல்வநாயகம்



தொழிற்சங்கங்களின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து நாட்டை ஆட்சி செய்ய முடியாது. மக்கள் நலனுக்குத் தேவையான தீர்மானங்களை உரிய வகையில் எடுப்பது அவசியமென வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தொழிற்சங்கங்களின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து செயல்படுவதானால் அமைச்சரவையோ, பாராளுமன்றமோ அவசியமில்லை என்றும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார். 06

## நோர்வே வர்த்தக அமைச்சருடன் கிழக்கு ஆளுநர் செந்தில் சந்திப்பு



நோர்வேயின் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் Cecilie Myrseth ஐ கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் ஒஸ்லோவில் சந்தித்தார். அமைச்சர் Cecilie Myrseth துடன் கலந்துரையாடல் மேற்கொண்ட செந்தில் தொண்டமான், கிழக்கு மாகாணம் மற்றும் பெருந்தோட்டப் பகுதிக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தார். நோர்வேயின் உதவி எப்போதும் இலங்கைக்கு பக்க பலமாக இருந்துள்ளதாக தெரிவித்த செந்தில் தொண்டமான், இலங்கை பெருந்தோட்ட சமூகத்தின் 200 ஆவது வருடத்தின் முதல் நினைவு முத்திரையையும் அமைச்சர் Cecilie Myrseth க்கு கையளித்தார்.

அமைச்சர் டக்ளஸின் அழைப்பையேற்று

## யாழ். கிளிநொச்சிக்கு பிரதமர் தினேஷ் விஜயம்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பையேற்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அடுத்த வாரம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுவின் தலைவரென்ற வகையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதமருக்கு இந்த அழைப்பை விடுத்தார். இதை யேற்றுள்ள பிரதமர் தினேஷ் உத்தியோகபூர்வ ஏற்பாடுகளைச் செய்துள்ளார். பிரதமரின் உத்தியோகபூர்வ விஜயம் தொடர்பான நிகழ்வுகளை ஒழுங்கு செய்யும் கலந்துரையாடல் ஒன்றை சூம் செயலி ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 06

போதைப்பொருள் வர்த்தகம் உள்ளிட்ட

## குற்றச் செயல்களை ஒடுக்க மக்களின் ஆதரவு அவசியம்



நாட்டில் குற்றச் செயல்கள், போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் கும்பல்களை ஒடுக்குவதற்கு மக்களின் ஆதரவு தொடர்ந்து பொலிஸாருக்கு தேவை என்றும், பொலிஸாரை நம்பிய சமூகம் பாதுகாக்கப்படுமெனவும் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

"சுவசர கெதெல்ல" சமூகத்தை கட்டியெழுப்பும் புனர்வாழ்வு மற்றும் சிகிச்சை 06

11 இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவம்

## கரன்னாகொடவின் மனுவை விசாரிக்க 05 நீதியரசர்கள்

**மேன் முறையீட்டு நீதிமன்றம் தீர்மானம்**

இளைஞர்கள் 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் போனமை தொடர்பில் தமக்கெதிராக தொடரப்பட்டுள்ள வழக்கை இடைநிறுத்த இடைக்கால தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி கடற்படை முன்னாள் தளபதி அட்மிரால் ஓஃப் த ப்லீட் வசந்த கரன்னாகொட தாக்கல் செய்திருந்த ரீட் மனுவை விசாரணை செய்வதற்கு ஐந்து நீதியரசர்களைக்கொண்ட மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று (07) தீர்மானித்தது.

இது தொடர்பான மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முழு அமர்வு முன்னிலையில் 06

# இலந்தையடி, ஆலங்குடா பகுதிகளில் கடலரிப்பால் மக்கள் பாதிப்பு




**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**

கற்பிட்டி நுரைச்சோலை கரையோரப்பகுதியின் கொய்யாவாடி, இலந்தையடி மற்றும் ஆலங்குடா உள்ளிட்ட பிரதேசங்கள் தொடர்ச்சியாக கடல் அரிப்புக்குள்ளாகி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கரையோரப்பகுதியில் சுமார் 200 இற்கும் அதிகமான மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன் கடலரிப்பினால் இவர்களின் வாழ்வாதாரம் முழுமையாக பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கின்றனர். தற்போது மீனவ மக்களின் படகுகள் கூட கரையோரங்களில் வைக்கமுடியாத நிலைமை காணப்படுகின்றன. மேலும், சுனாமி ஏற்பட்ட போது பாதுகாப்பு கருதி கரையோரப்பகுதிகளில் சவர்க்கு மரங்கள் நாட்டப்பட்டபோதிலும் தற்போது கடலரிப்பினால் அந்த மரங்கள் சரிந்து விழுவதை காணக்கூடியதாகவுள்ளது.

இப்பகுதியில் கண்ணுக்கு குளிர்ச்சியாக நூற்றுக்கணக்கான சவுக்கு மரங்கள் நிரம்பிக் காணப்பட்ட போது அங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் , பொதுமக்களும் வருகை தந்ததாகவும், தற்போது புத்தளத்தைச் சேர்ந்த பொதுமக்கள் கூட தங்களது பொழுதைக் கழிப்பதற்காக அந்த இடத்திற்கு வருகை தருவதில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் கடலரிப்பை தடுப்பதற்காக பாரிய கற்கல் போடப்பட்டுள்ள போதிலும் கடலையின் தீவிரம் இதுவரையிலும் குறையவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை சுமார் 400 மீற்றர் வரை கடலரிப்புக்குள்ளாகியுள்ளதாக மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில், கடலரிப்பினால் தற்போது தமது குடியிருப்புகளும், மீன்வாடிகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக மக்கள் கவலைத் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு, இலந்தையடி கடற்பிரதேசத்தை அண்மித்த பகுதியில் கத்தோலிக்க சவக்காலை ஒன்று உள்ளதுடன், இவ்வாறு தொடர்ந்தும் கடலரிப்பு ஏற்படுமானால் அந்த சவக்காலையும் கடுமையாக பாதிக்கப்படும் என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனவே, சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவரக்கூடிய ஓர் இடமாக புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி பிரதேசம் காணப்படுகின்ற போதிலும், கடலரிப்பினால் அந்தப் பகுதியின் அழகுகளும் மழுங்கிய நிலையில் காணப்படுவதாகவும் இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## நகர்வலம்

# தாக்குதலுக்குள்ளான பாடசாலை மாணவன் உயிரிழப்பு

**ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்**



ஹம்பாந்தோட்டை சிப்பிகுளம் பிரதேசத்தில் 17 வயது பாடசாலை மாணவனின் தாக்குதலுக்குள்ளாகி மற்றுமொரு பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளதாக ஹம்பாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹம்பாந்தோட்டை நகர பாடசாலையொன்றில் தரம் 10 இல் கல்வி கற்று வந்த எம். எப். ஆதிப் அஹமட் எனும் 15 வயது மாணவனே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

தாக்குதலுக்குள்ளான மாணவன் ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

பிரத்தியேக வகுப்பொன்றில் கலந்து கொள்வதற்காக சிப்பிகுளம் பிரதேசத்துக்கு சென்றிருந்த போது மற்றுமொரு பாடசாலை மாணவனும் பிரதேசத்துக்கு வருகைதந்து பிரத்தியேக வகுப்பிற்கு அருகாமையில் தாக்குதல் நடாத்தியுள்ளார். தாக்குதல் நடாத்திய மாணவனின் சகோதரனுடன் இருந்துவந்த குரோதம்காரணமாக இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேகநபர்கள் மூவரை கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மூன்றாவது முறையாகவும் பிரதமராக வெற்றி பெற்று மோடி சாதனை படைப்பு புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் என். ரவிக்குமார் வாழ்த்து



மூன்றாவது முறையாக பிரதமர் மோடி வெற்றி பெற்றுள்ளமை இந்திய அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும் என புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் என். ரவிக்குமார் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாழ்த்துச் செய்தியில்,

இந்தியாவின் அனைத்து எதிர்கட்சிகளும் ஒன்றாக சேர்ந்து மோடியை தோற்கடிப்பதற்காக களத்தில் இறங்கி செயற்பட்ட போதிலும் அவர் அவற்றையெல்லாம் உடைத்தெறிந்துள்ளமை அவருடைய சேவையின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையாகும்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. அதற்கு மோடியின் வெற்றிகரமான திட்டங்களே காரணம். இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்த பொழுது உடனடியாக உதவிகளை செய்தார்.

வீடமைப்பு உட்பட பல விடயங்களுக்கு தொடர்ந்தும் உதவிகளை செய்து வருகின்றார்.

எனவே அவருடைய வெற்றிக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாக புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் ரவிக்குமார் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் சு.முரளிதரன் அரச சேவையிலிருந்து ஓய்வு



இசுருபாய கல்வி அமைச்சில் பல்வேறு பதவிநிலைகளில் சேவையாற்றிய கவிஞர் சு. முரளிதரன் நேற்று அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். மலையக மண்ணின் மைந்தரான இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் விசேட தர உத்தியோகத்தர் ஆவார். விஞ்ஞானப் பட்டதாரியாகிய இவர் சிறந்த கவிஞர் என்பதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இலங்கையில் ஹைக்கூ கவிதைத் துறையின் முன்னோடியாக இவர் விளங்குகின்றார். இவர் 'ஆக்கிய கூடைக்குள் தேசம்' என்ற ஹைக்கூ கவிதை நூல் புகழ் பெற்ற நூலாக விளங்குகின்றது. இதனைவிட மலையக இலக்கியத் தளங்கள், தியாக இயந்திரங்கள், தீவகத்து ஊமைகள் உள்ளிட்ட பல நூல்களை ஆக்கியுள்ளார். விஞ்ஞான ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்த இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவாகி கொட்டகலை ஆசிரிய கலாசாலையின் அதிபர், சிறிபாத கல்வியியல் கல்லூரி பீடாதிபதி என ஆசிரிய கல்வித்துறையில் சேவையாற்றி தொடர்ந்து இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக் கிளைப் பணிப்பாளர், தமிழ்ப் பாடசாலை அபிவிருத்திக்கான பணிப்பாளர், பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான பணிப்பாளர் எனப் பல்வேறு பதவி நிலைகளை வகித்துள்ளார். கடந்த 2024 ஏப்ரல் மாதம் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுச் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மத்திய கல்வி அமைச்சில் உயர் நிலை உத்தியோகத்தராக சேவையாற்றி ஓய்வு பெறும் கவிஞரை நாமும் வாழ்த்துவோம்.

**சந்திரமௌலீசன் லலீசன்**
**(அதிபர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை )**

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் பலி

ஹெட்டிபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட தகராறில் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

பிஹிபியா ரத்மலை பகுதியில் நேற்றுமுன்தினம் (06) மாலை இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.பிஹிபியா ரத்மலை பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர் உயிரிழந்தவரின் மூத்த சகோதரரின் மகன் என்பதுடன், உயிரிழந்தவரின் மகனுக்கும் சந்தேகநபருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இக்கொலை இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட ஒருதொகை இஞ்சி மீட்பு

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**

இந்தியாவிலிருந்து கடல்மார்க்கமாக இலங்கைக்கு சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு தொகை இஞ்சி, நுரைச்சோலை இலந்தையடி கடற்பிரதேசத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர். இஞ்சி கடத்தலுடன் தொடர்புடைய இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் மழை பெய்யும் சாத்தியம்

மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடமேல், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பல தடவைகள் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 4050 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

# இலவச குருதி பரிசோதனை

**நானுஓயா நிருபர்**



நானுஓயா டெஸ்போட் தோட்டத்தில் தோட்ட நிர்வாகமும் , பெரண்டினா நிறுவனமும் இணைந்து டெஸ்போட் தோட்டத்தில் நான்கு பிரிவுகளில் தொழில் புரியும் பெண் தொழிலாளர்கள் தொழில் புரியும் இடங்களுக்கு சென்று பொதுவான இடங்களுக்கு வரவழைத்து (06) இலவசமாக குருதிப் பரிசோதனை செய்து இதில் காணப்பட்ட நோய்களை கண்டறிந்து அதற்கு தேவையான மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன. குறித்த நிகழ்ச்சியில் தோட்ட அதிகாரிகளான தில்சன் டி சில்வா, திலுக்க மதுசங்க மற்றும் பெரண்டினா நிறுவனத்தின் ஜெயந்தி மாலா, ரொஹான் உட்பட தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.



லுணுகலை, சுவிண்டன் தோட்டம் மேற்பிரிவு, அம்மன் புரம், "Golden Eagle" விளையாட்டு கழகத்தின், கரப்பந்தாட்ட மைதான திறப்பு விழா மற்றும் மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியானது பகி பாலச்சந்திரன் சமூக நற்பணி அமைப்பின் அனுசரணையின் கீழ் வெற்றிகரமாக நடைபெற்றது.

# தேயிலை தொழிற்சாலையில் தீ பரவல்



**கம்பளை நிருபர்**

கம்பளை நவ குறுந்துவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறுந்துவத்த நகரிலுள்ள தேயிலை தொழிற்சாலை நேற்று அதிகாலை திடீரென தீ பிடித்து எரிந்துள்ளது.

நவ குறுந்துவத்த நகரிலுள்ள தேயிலை தொழிற்சாலை திடீரென தீ பிடித்து எரிந்தமையால் தேயிலை தொழிற்சாலை முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது. இதனால் தேயிலை தொழிற்சாலை முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களும் எரிந்து போயுள்ளது.

மேலதிக விசாரணைகளை கம்பளை நவ குறுந்துவத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## மலைச்சாரல்

# கௌரவிப்பு விழா

**ஹற்றன் விசேட நிருபர்**

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவான ஆசிரியர்கள், மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு திம்புள்ள தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபர் திருமதி ஏ.என்.கொட்வின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள், கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் நினைவுச் சின்னங்கள், விருதுகள் வழங்கி பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.



மலையக மக்கள் சக்தியின் தலைவர் இராமன் செந்தூரன் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் மலையக மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் உட்பட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# புனித சூசையப்பர் ஆலய 100 ஆவது ஆண்டு நிறைவு விழா

புனித சூசையப்பர் ஆலய 100 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இன்று மஸ்கெலியா நகர் வழியாக கண்டி மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய வெலயின்ஸ் மெண்டிஸ் ஊர்வலமாக அழைத்து செல்லப்படவுள்ளார்.

1969 ஆம் ஆண்டில் நீரில் மூழ்கிய மஸ்கெலியா (சென் ஜோசப்) புனித சூசையப்பர் ஆலயம், மற்றும் மஸ்கெலியா நகரில் புதிதாக கட்டப்பட்ட புனித சூசையப்பர் ஆலயம் அமைக்கப்பட்டு 50 ஆண்டுகள் என்பதால் வெகு சிறப்பாக இவ்விழாவை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள அனைத்து மக்களும் மத்திய மாகாணத்திலுள்ள அனைத்து கிறிஸ்தவ ஆலய பங்குதந்தைகள் அருட்சகோதரிகள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.



இதற்கு புனித சூசையப்பர் ஆலய அருட் தந்தை கபிரியேல் குணசேகரன் அடிகளார் தலைமையில் நூற்றாண்டு விழா மற்றும் பொன் விழா நடைபெறவுள்ளது.

# இளம் ஜோடி, பிரதேசவாசிகளால் பாதுகாப்பாக மீட்பு

கொத்மலை கெரண்டி நீர்வீழ்ச்சியில் இருந்து கீழே குதித்து தங்களுடைய உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற இளம்ஜோடி, அப்பகுதி மக்களால் காப்பாற்றப்பட்ட சம்பவமொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாக கொத்மலை பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

புஸ்ஸல்லாவ, ப்ரோடெக் தோட்டத்தை சேர்ந்த 18 வயதுடைய இளம் காதல் ஜோடியே இவ்வாறு தங்கள் உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது .

குறித்த நீர்வீழ்ச்சியில் இருந்து கீழே குதித்த இளம் ஜோடி, பிரதேசவாசிகளால் காப்பாற்றப்பட்டுள்ளதுடன், இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இருவரும் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மீட்கப்பட்ட இளம் ஜோடியை புஸ்ஸல்லாவ பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்ததன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கம்பளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும்,

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

தினகரன் விளம்பரம் 0112429367

விற்பனை பிரிவு 0112429444, 0112429378

ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 ஜுன் 8 சனிக்கிழமை

தினகரன் THINAKARAN தினகரன்


தொழுகை நேரம்

சுபஹ் - 04.31
லுஹர் - 12.11
அஸர் - 03.38
மஃரிப் - 06.25
இஷா - 07.42

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் வைகாசி 26

ராகுகாலம் : காலை : 8.52 - 10.22வரை
சுபநேரம் : பகல் : 2.52 - 4.22வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



மேல்மாகாண வெள்ள பாதிப்பு

## ட்ரோன்கள் மூலம் நுளம்பு ஒழிப்பு மருந்து தெளிப்பு



மேல் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கை கவனத்திற்கொண்டு, டெங்கு பரவும் இடங்களை அழிப்பதற்கு ட்ரோன்கள் மூலம் நுளம்பு ஒழிப்பு மருந்து தெளிக்கப்படுமென கொழும்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் பி.கே. புத்திக மகேஷ் தெரிவித்தார்.

மேல்மாகாண டெங்கு கட்டுப்பாட்டுக் குழுவின் ஆலோசனையின் பேரில், விமானப்படையினரின் ஒத்துழைப்புடன் இப்பணியை மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரியின் 05 பிரிவுகளும் கம்பஹா மாவட்டத்தில் 06 பிரிவுகளும் களுத்துறை மாவட்டத்தில் 08 பிரிவுகளும் வெள்ள நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

# IMF இன் மூன்றாம் தவணைக் கடன் பெறுவதில் எவ்வித சிக்கலும் இல்லை

12இல், மீளாய்வு கூட்டத்தின் பின் 02 ஆவது தவணை கடன் கிடைக்கும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் தவணைக் கடனைப் பெற்றுக் கொள்வதில் எந்தவித சிக்கல்களும் கிடையாதென, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட மீளாய்வுக் கூட்டத்தை தொடர்ந்து, இரண்டாம் தவணைக் கடன் கிடைக்குமென்றும் அதனைத் தொடர்ந்து மூன்றாம் தவணைக் கடனைப் பெற்றுக் கொள்வதில் எவ்வித சிக்கல்களும் ஏற்படாதென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், சர்வதேச கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் பிணைமுறி வழங்கும் நாடுகள் இதுவரை இணக்கப்பாட்டுக்கு வரவில்லை. எனினும் அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தைக்கு சாதகமான சூழல் காணப்படுகிறது. எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட மீளாய்வு கூட்டத்தைத் தொடர்ந்து இரண்டாம் தவணை கடன் கிடைக்கும்.

பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு தற்போது மீண்டுள்ளது. பொருளாதார மறுசீரமைப்புக்கான சட்டங்கள் பல இயற்றப்பட்டுள்ளன. அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் கடன் முகாமைத்துவத்துக்கும் கடன் நிலைபேறான தன்மைக்கும் இன்றியமையாததாகும்.

பொருளாதார மறுசீரமைப்புகளுக்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. கடன் முகாமைத்துவத்தை மாற்றியமைத்து ஒரு கேந்திரத்தில் அதன் பொறுப்புக்களை வழங்கி பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வது அரச நிதி முகாமைத்துவ சட்டமூலத்தின் பிரதான இலக்காகும்.

சர்வதேச மட்டத்தில் பல இணக்கப்பாடுகளை எட்டியுள்ளோம். நாட்டின் கடன் 2022 ஆம் ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தியில் 128 வீதமாகக் காணப்பட்டது.

அதனை 2032 ஆம் ஆண்டில் 95 சதவீதமாக குறைத்துக் கொள்ளல், 34.6 சதவீதமாக காணப்படும் நிதி விநியோகத்தை 13 வீதமாக குறைத்துக் கொள்ளல் அந்த இலக்காகும்.

வெளிநாட்டுக் கடன் 2022 ஆம் ஆண்டு 9.4 வீதமாக காணப்பட்டது. இதனை 4.5 வீதமாக குறைத்துக் கொள்ளல் என்ற மேற்படி மூன்று பிரதான காரணங்களுக்கு அமையவே சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்குநர்கள் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை புதிய கொள்கைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதை சவாலுக்குட்படுத்த முடியாது.எவர் ஆட்சி செய்தாலும் நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் மறுசீரமைப்புக்களை அமுல்படுத்த வேண்டும்.

2024 பெப்ரவரி மாத நிறைவில்

## ஊழியர் சேமலாப நிதியத்தில் 3,912 .3 பில்லியன் ரூபா இருப்பு

வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்பட மாட்டாது - அமைச்சர் செஹான் சேமசிங்க

லோரன்ஸ் செல்வநாயகம்

2024 பெப்ரவரி மாதம் நிறைவடையும் போது ஊழியர் சேமலாப நிதியத்தில் 3,912 .3 பில்லியன் ரூபா இருப்பு காணப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதி திணைக்களத்தின் மூலம் அந்த நிதியத்தின் 1958/ 15 ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட அலுவல்களுக்கு மட்டும் அதனை பயன்படுத்துவதற்கும் வேறு வேலைத் திட்டங்களுக்கு அந்த நிதி பயன்படுத்தப்பட மாட்டாது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய் மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி மயந்த திசாநாயக்க எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதே வேளை, ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்வோர், ஊழியர் சேமலாப நிதி மற்றும் அதற்கான தனியார் துறை ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பில் தனித்தனியாக உடனடியாக விபரங்களை தெரிவிக்க முடியாதுள்ளதாகவும் அவர் தமது பதிலின் போது குறிப்பிட்டார்.

# கிரிக்கெட் அணி எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு

சபையில் அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இலங்கை கிரிக்கெட் அணி எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் முறையாக ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படுமென, விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச கிரிக்கெட் சபை பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே அமெரிக்காவில் ரி 20 உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்தி வருகிறது.இதை, சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், இதனால் இலங்கை அணி எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இலங்கை அணி எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தெரிவித்த விடயங்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ரி 20 உலகக் கிண்ண போட்டிக்காக அமெரிக்கா சென்றுள்ள இலங்கை அணியினர், அங்குள்ள விமான நிலையத்தில் விமானம் தாமதமாகியதால், எதிர்கொள்ள நேர்ந்த பிரச்சினைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சபையில் தெளிவுபடுத்தினார்.

இது தொடர்பின் மேலும் தெரிவித்த அமைச்சர், அந்த சந்தர்ப்பத்தில் இலங்கை அணி மட்டுமன்றி அயர்லாந்து, தென்னாபிரிக்க அணியினரும் விமானம் தாமதமானதால் புளோரிடா விமான நிலையத்தில் 07 மணிநேரம் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபை மற்றும் சர்வதேச கிரிக்கெட் சபை ஆகியவற்றிலும் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அணியும் ஒவ்வொரு விதமாக பார்க்கப்படுகிறது. இந்தப் போட்டிகள் பல்வேறு நெருக்கடிக்கு மத்தியிலேயே நடக்கிறது.

அமெரிக்க கிரிக்கெட் நிறுவனம் சர்வதேச கிரிக்கெட் சபையினால் தடை செய்யப்பட்ட நிலையிலேயே உள்ளது. இதனால் நெருக்கடிகள் பலவற்றுக்கு மத்தியிலேயே அமெரிக்காவில் போட்டி நடத்தப்படுகிறது.

எவ்வாறாயினும் இலங்கை கிரிக்கெட் அணியின் குறைபாடுகள் தொடர்பில் ஆராய்ந்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# நுகர்வோரை பாதுகாக்க இரண்டு வாரத்தில் பாதுகாப்புச் சட்டம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நுகர்வோரை பாதுகாக்கும் வகையில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்துக்கான திருத்தங்களை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள நுகர்வோர் சட்டம் கடந்த 20 வருடங்களாக திருத்தம் செய்யப்படவில்லை.இதை சபையில் சுட்டிக் காட்டிய அமைச்சர், தற்போதுள்ள சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும், தற்போது சட்ட மாஅதிபரின் கவனத்துக்கு இது அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சுமித் உடுகும்புர எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தமது கேள்வியின் போது, எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளன.

எனினும், இதன் பிரதிபலன் நுகர்வோருக்கு கிடைப்பதில்லை. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை என்ன என அவர் அமைச்சரிடம் வினவினார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், அத்தியாவசிய பொருட்களின் விலைகள் தற்போது குறைவடைந்து வருகின்றன. இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

எனினும் நுகர்வோர் அதிகார சபையின் விசாரணை பிரிவு அதிகாரிகள் குறைபாடு காணப்படுகின்றது. நாடளாவிய ரீதியில் 277 அதிகாரிகளே தற்போது சேவையில் உள்ளனர்.

இந்நிலையை நிவர்த்தி செய்யும் வகையில் மேலும் விசாரணை பிரிவு அதிகாரிகளை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் இந் நடவடிக்கையை முன்னெடுக்க முடியும். விரிவான சந்தை நடவடிக்கைகள் நாட்டில் இடம் பெறுவதால் நுகர்வோருக்கு அநீதி ஏற்படுவதை அறிய முடிகிறது.

அதிக லாபத்தை நோக்காகக் கொண்டு வர்த்தகர்கள் செயற்படுகின்றனர்.

அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதியுடன் இணைவாரென்ற அச்சத்தில்

## ஐ.ம. சவுடன் நெருங்கியவர்களே ஹர்ஷவுக்கு அச்சுறுத்தல் விடுப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா பல விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார்.அவருக்குப் பல்வேறு அழுத்தங்கள் விடுக்கப்படுவதாக அவர் சபையில் தெரிவித்தார்.

ஆளும் கட்சியில் எவரும் அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்திக்கு நெருக்கமாக உள்ளவர்களே அவருக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தி உள்ளனர். இதற்கு காரணம் ஹர்ஷ டி சில்வா ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்து விடுவார் என்ற பயமே என,நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஹர்ஷ டி சில்வா தமக்கான அழுத்தங்கள் தொடர்பில், சபையில் ஆளும் கட்சியினரை குற்றஞ்சாட்டினார்.

அவர் எனது நண்பர். அவர் தற்போதைய சூழ்நிலையில் எதிர்க்கட்சிக்குள் கவனமாக செயற்பட வேண்டும் என்பதை நான் அவருக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பொருளாதாரம் மற்றும் அரச நிர்வாகம் தொடர்பில் ஆலோசனை வழங்கியவரே நாலக கொடஹேவா. அவர் தற்போது எதிர்க்கட்சித் தலைவரிடம் உள்ளார்.

ஹர்ஷ டி சில்வாவுக்கு அச்சுறுத்தல் விடுப்பது நாலக கொடஹேவாவா? அல்லது ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார குழுவின் ஒரு உறுப்பினரா என்பது தொடர்பில் ஆராய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு

# பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 18 பேர் விசேட குழுக்களால் கைது

நாடளாவிய ரீதியில் புதன்கிழமை (05) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில். பாதாள உலக கும்பலைச் சேர்ந்த மேலும் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பாதாள உலக செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 விசேட குழுக்களால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றிவளைப்பில் பாதாள உலக கும்பலுடன் தொடர்புடைய வர்களென சந்தேகிக்கப்படும் மேலும் 18 பேர், கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில் கொழும்பு 2, 10, 13 மற்றும் 08 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 55, 48, 39, 28, 48, 47, 51 மற்றும் 27 வயதுடைய 08 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில் மாதிவெல, அங்கொடை, தெஹிவளை மற்றும் இராஜகிரிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30, 51, 35, 32 மற்றும் 27 வயதுடைய ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில், பிட்டபெத்தர பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவர் கைதானார்.



மாத்தறை பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில் ரொட்டும்ப மற்றும் தங்காலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 44, 33, 28 மற்றும் 48 வயதுடைய நான்கு பேர், கைது செய்யப்பட்டனர்.

கடந்த மார்ச் மாதம் 19 இல், ஆரம்பிக்கப்பட்ட இச்சுற்றிவளைப்பில், இதுவரை பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 1,439 பேர் கைதாகினர்.

# தேர்தல் ஆணைக்குழு மீதான குற்றச்சாட்டுகள்

விழிப்புடன் சபை செயற்பட வேண்டும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்பில் பல்வேறு தரப்பிலிருந்தும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், இது தொடர்பில் பாராளுமன்றம் விழிப்புடன் செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்:

இனிமேல்,தேர்தல்கள் ஆணைக் குழுவுக்காக ஆஜராகப் போவதில்லை என சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தில் அறிவித்துள்ளார்.

ஆணைக்குழு முறையாக தமது செயற்பாடுகளை மேற்கொள்ளவில்லை என்றே அதில் சட்டமா அதிபரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ,தேர்தலை நடத்தும் பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே இருப்பதாகவும் ஆணைக்குழு அதன் செயற்பாடுகளை முறையாக முன்னெடுக்கத் தவறியுள்ளது என்றும் பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்பில் அனைத்து தரப்பிலிருந்தும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், அது தொடர்பில் பாராளுமன்றம் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# அனர்த்தங்களில் பாதிப்புற்றோருக்கு விரைவில் இழப்பீடுகள் வழங்கப்படும்

எவரது சண்டித்தனங்களுக்கும் அரசு இடமளிக்காது

(லோரன்ஸ் செல்வநாயகம்)



சீரற்ற காலநிலையால், அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அனர்த்தங்களின் பாதிப்புக்களை மதிப்பீடு செய்வதற்கு மேலும் சில வாரங்கள் தேவைப்படுவதாக சபையில் சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், நாட்டின் பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் முடியுமான அளவில் இழப்பீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

இவ்விடயத்தில், சண்டித்தனத்துக்கும் துஷ்பிரயோகத்துக்கும் இடமளிக்க முடியாது என்றும், சண்டித்தனத்துக்கு ஒருபோதும் அரசாங்கம் பயப்படப்போவதில்லை என்றும் இராஜாங்க அமைச்சர் உறுதியாகத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்பிக்களான ஹர்சன ராஜகருணா, மரிக்கார் போன்றோர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

06

# வெளி நாடுகளிலிருந்து வருவோர் வீசாக்கள் இருப்பதாக பெரும் மோசடி

எச்சரிக்கை விடுக்கிறார் யாழ்.SSP ஜெகத் நிஷாந்த

(யாழ்.விசேட நிருபர்)

வெளிநாடுகளிலிருந்து வரும் யாழ். நபர்கள், கிராமப் புற இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக கூறி மோசடிகளில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக, யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு மோசடிகளும், நுழைவிசா மோசடிகளும் அதிகரித்து வருகின்றன. வெளிநாடுகளிலிருந்து வருவோரே இத்தகைய மோசடியில் அதிகம் ஈடுபடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் கிராமப்புற இளைஞர்களை இலக்கு வைத்து, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து 30 தொடக்கம் 40 இலட்சம் ரூபா வரையிலான பணமோசடிகளில் ஈடுபடுகின்றனர்.

அவர்களின் ஏமாற்று நாடகத்தை அறியாத அப்பாவி இளைஞர்கள் இவர்களின் போலி வாக்குறுதிகளை நம்பி பணத்தை இழக்கின்றனர்.

இது தொடர்பான ஏராளமான முறைப்பாடுகள் யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனவே, இந்த மோசடிகள் தொடர்பில் அவதானமாகவும், விழிப்பாகவும் இருப்பது அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 26ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜா பிறை 01

### குறள் தரும் சிந்தனை



உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்

மதுப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் தமது சிறப்பை இழப்பது மட்டுமல்ல, மாற்றாரும் அவர்களைக் கண்டு அஞ்ச மாட்டார்கள்.

# மோடி தலைமையிலான ஆட்சி பலமடையுமென்பதே நம்பிக்கை

இந்தியாவின் பிரதமராக மூன்றாவது தடவையாகப் பதவியேற்கிறார் நரேந்திர மோடி. இந்திய மக்களவைத் தேர்தலில் பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியதையடுத்து புதிய அரசாங்கத்தை அக்கூட்டணி அமைக்கின்றது. புதிய அரசின் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கின்றார்.

இந்திய லோக்சபா தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மொத்தமாக 291 இடங்கள் கிடைத்துள்ளன. ஆனால் பா.ஜ.க தனித்து 240 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. ஆகவே தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க பா.ஜ.கவினால் இயலாது. இதனால் இந்தியாவில் மீண்டும் தே.ஜ.கூட்டணி ஆட்சி அமைகின்றது.

இப்பதவியேற்புக்கு முன்னதாக பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் மோடியை பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. தற்போதைய லோக்சபாவை கலைக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் பிரதானமானது தெலுங்கு தேசம் கட்சியாகும். அக்கட்சியானது அதிக ஆசனங்களை வைத்துள்ளது. அக்கட்சியின் தோழமையுடனேயே தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியமைக்க முடியும். தெலுங்கு தேசம் கட்சியின் ஆதரவு உறுதியாகக் கிடைக்குமா என்ற சந்தேகம் பா.ஜ.கவுக்கு உள்ளத்தில் அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டேயிருந்தது. ஆனால் அந்த அச்சம் பா.ஜ.கவுக்கு இப்போது நீங்கியுள்ளது.

தெலுங்கு தேசம் கட்சியின் தலைவரான சந்திரபாபு நாயுடு இந்தச் சந்தேகத்தைத் தெளிவுபடுத்தி உள்ளார்.

"தேசிய ஜனநாயகக் கூட்டணியுடன் இணைந்து பயணிப்பதில் உறுதியாக இருக்கிறேன். கூட்டணி கூட்டத்தில் பங்கேற்கிறேன்" என்று ஆந்திர முதல்வராக பொறுப்பேற்கும் தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு கூறியிருந்தார். எனவே மோடி தலைமையில் புதிய அரசாங்கம் அமைகின்றது.

ஆனாலும் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சி அமைவதில் பெரும் இடையூறுகள் உள்ளதாகவும், அவ்வாறு ஆட்சி அமையுமானால் அந்த ஆட்சி எத்தனை காலத்துக்கு நீடிக்கும் என்பதை அறுதியிட்டுக் கூற முடியாதிருப்பதாகவும் இந்திய அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் பதவி மிகவும் முக்கியமானது என்பதால் கடந்த இரண்டு முறை ஆட்சியிலும் அதை பா.ஜ.கவே தக்கவைத்துக் கொண்டிருந்தது. சென்ற முறை ஓம் பிர்லா சபாநாயகராக இருந்தார். அதற்கு முன்பும் சபாநாயகர் பா.ஜ.கவை சேர்ந்தவராகவே இருந்தார். ஆனால் இந்த முறை சபாநாயகர் பதவி எங்களுக்கு வேண்டுமென தற்போது பா.ஜ.க கூட்டணியில் முக்கிய தூண்களாக இருக்கும் சந்திரபாபுவின் தெலுங்கு தேசமும், நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளமும் நிபந்தனை விதித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

சந்திரபாபு நாயுடு ஆந்திர மாநிலத்திற்குச் சிறப்பு அந்தஸ்து வழங்க வேண்டும் என்பதை நிபந்தனையாக வைத்துள்ளார். ஆந்திரா, தெலுங்கானா என மாநிலங்கள் பிரிக்கப்பட்ட சமயத்தில் இருந்து ஆந்திராவிற்குச் சிறப்பு அந்தஸ்து வேண்டும் என கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில், இந்த நிபந்தனையை தற்பொழுது மீண்டும் கையில் எடுத்துள்ளது தெலுங்கு தேசம்.

அதேபோல் பீகார் மாநிலம் பின்தங்கி இருக்கிறது எனவே எங்களுக்கும் சிறப்பு அந்தஸ்து வேண்டும் என மாநில முதல்வர் நிதிஷ்குமார் நிபந்தனை விதித்துள்ளார் என்று கூறப்படுகிறது. கூட்டணிக் கட்சிகளின் இந்த கோரிக்கைகளை பா.ஜ.க சமாளிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இந்திய மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள சிறுபான்மைக் கட்சிகளின் எம்.பிக்கள் சிலரும், சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற எம்.பிக்கள் சிலரும் பா.ஜ.கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அது மாத்திரமன்றி, வேறு பல எம்.பிக்களையும் பா.ஜ.கவின் பக்கத்துக்கு வளைத்தெடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் கூறுகின்றன.

அவ்வாறானால் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சி மென்மேலும் பலமடைவதற்கு வாய்ப்பு உள்ளது என்றே கூற வேண்டியுள்ளது. அவ்வாறு பலமடையுமானால் எதிரணியான 'இந்தியா' கூட்டணியினால் நரேந்திர மோடியின் அரசை வீழ்த்த முடியாதென்பது உறுதியாகி விடும்.

இந்திய அரசியல் நிலைமை இவ்வாறிருக்கையில், பிரதமர் நரேந்திர மோடி சர்வதேச அளவில் பெரும் செல்வாக்குப் பெற்றதொரு அரசியல் தலைவர் என்பதை மறுப்பதற்கில்லை. அரசியல் ஆளுமையும் நிர்வாகத்திறனும் கொண்ட தலைவர் அவர். உலக பொருளாதாரத்திலும்,வல்லமையிலும் இந்தியாவை உச்சநிலைக்குக் கொண்டு வருவதற்கு அவரது ஆளுமைத்திறனே காரணமாகும். இலங்கையுடன் நெருக்கமான நட்புறவு கொண்ட அரசியல் தலைவராகவும் அவர் விளங்குகின்றார்.

இவ்வாறான விடயங்களையெல்லாம் கவனத்தில் கொண்டு பார்க்கையில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சி பலம் பெற்று நீடிக்குமென்றே எண்ணத் தோன்றுகின்றது.

editor.tkn@lakehouse.lk

# உடல், உள ஆரோக்கியத்தை வலியுறுத்தி மருதமுனையில் சைக்கிளோட்ட நிகழ்வு





சர்வதேச சைக்கிள் ஓட்டதினத்தை (ஜூன் 3) தினத்தை முன்னிட்டு கல்முனை பிரதேச செயலகமானது கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து ரைடர்ஸ் ஹப் சைக்கிளிங் கழகத்தின் உதவியுடன் ஏற்பாடு செய்த சைக்கிளோட்ட விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் மருதமுனையில் இடம்பெற்றது.

ரைடர்ஸ் கழகத்தின் தலைவர் கலீல் கபூர் தலைமையில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு சைக்கிளோட்டம் மருதமுனை பிரதான வீதியில் ஆரம்பமாகி, கல்முனை நகரை சென்றடைந்து பின்னர் கல்முனை கடற்கரை பள்ளி செல்லும் பிரதான வளைவின் ஊடாக மீண்டும் கல்முனை நகர் வழியாக பாண்டிருப்பு, மருதமுனையை வந்தடைந்தது. அதன் பின்னர் மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது பிரதேசத்தில் ஆரம்ப காலத்தில் இருந்து தினமும் சைக்கிளை போக்குவரத்துக்காக பயன்படுத்தும் சிரேஷ்ட அதிகாரிகள் மாலை அணிவித்து பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி, கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி, டொக்டர் பௌஸாத் மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள், ரைடர்ஸ் சைக்கிளிங் அணியின் உறுப்பினர்கள் உட்பட பலரும் இந்த சைக்கிள் ஓட்ட நிகழ்வில் கலந்து கொண்டனர். இதில் மருதமுனை பிரதேசத்திற்கு வெளியில் தூர இடங்களில் இருந்தும் பலர் வருகை தந்து கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் ஆரோக்கிய வாழ்வின் அவசியத்தை வலியுறுத்தி எல்லோருக்கும் இலைக் கஞ்சி வழங்கப்பட்டது.

இந்த சைக்கிள் ஓட்ட நிகழ்வானது சைக்கிள் ஓட்டுதலை கொண்டாடுவோம், சைக்கிள் பாவனையை ஊக்குவித்தலால் ஆரோக்கிய சமூகத்தை உருவாக்குவதோடு மாசற்ற சுற்றுச்சூழலை எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்லும் முன்னோடிகளாவோம், ஆரோக்கியமான காபனற்ற பசுமையான பூமி கிரகத்தின் உருவாக்கத்தில் பங்காளிகளாகுவோம் எனும் கருப்பொருட்களை கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உலக சைக்கிள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 03ம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது. சைக்கிள் ஓட்டுவதால் பல ஆரோக்கிய நன்மைகள் இருப்பதால் இந்த நாள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது

மிதிவண்டியின் தனித்துவம், வலிமை, ஆயுள், மற்றும் பல்துறை ஆகிவற்றை அங்கீகரித்த ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 2018 ஆம் ஆண்டில் ஜூன் 03ம் திகதியை உலக சைக்கிள் தினமாக அறிவித்தது. இந்த நாள் ஐக்கிய நாடுகள் சபையில் பணிபுரியும் ஒரு சமூக விஞ்ஞானியான போலந்து பேராசிரியரான லெசெக் சிபில்ஸ்கி என்பவரால் நிறுவப்பட்டது.

சைக்கிள்களை பயன்படுத்துவதை ஊக்குவித்தல் மற்றும் சைக்கிள் ஓட்டுதலால் உடலில் மற்றும் உளவியல் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்நாள் காணப்படுகிறது. சைக்கிள் ஓட்டுதல் என்பது போக்குவரத்து முறையாக மட்டுமல்லாமல் சைக்கிள் ஓட்டுதலை ஒரு வழக்கமான செயற்பாடாக எடுத்துக் கொள்வது ஆரோக்கியத்திற்கும் பல்வேறு நன்மைகளை கொண்டுள்ளது. சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாத வகையில் மேற்கொள்ளப்படும் போக்குவரத்து முறையாகவும் சைக்கிள் ஓட்டுதலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து இந்த தினம் சர்வதேச ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

சைக்கிள் ஓடுவதால் இரத்த அழுத்த அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதோடு இருதய ஆரோக்கியம் ஏற்படுகிறது. கால்களின் வலிமை அதிகரிக்கிறது. தினமும் சைக்கிள் ஓட்டுவதால் நமது நுரையீரல் ஆரோக்கியம் மேம்படுகிறது. மனஅழுத்தம், மனச்சோர்வு, பதற்றம் போன்ற பிரச்சினைகள் குறையும். இது போன்ற பல நன்மைகள் சைக்கிள் ஓட்டுவதால் கிடைப்பதாக மருத்துவ ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

ஏ.எல்.எம்.ஷினாஸ்...
(பெரியநீலாவணை விசேட நிருபர்)

# நடிகை கங்கனா ரணாவத்தை கன்னத்தில் அறைந்தது ஏன்?

இந்திய நடிகை கங்கனா ரணாவத்தை கன்னத்தில் அறைந்தது ஏன் என்பது குறித்து சி.ஐ.எஸ்.எஃப் பெண் காவலர் விளக்கமளித்துள்ளார். அவரது விளக்க வீடியோ வைரலாகி வருகிறது.

கங்கனா ரணாவத் இம்முறை மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவரென்பது குறிப்பிடத்தக்கது.

டெல்லி செல்வதற்காக நடிகை கங்கனா ரணாவத் சண்டிகர் விமான நிலையம் வந்தபோது, பாதுகாப்பு சோதனைகளுக்குப் பிறகு கங்கனாவை சி.ஐ.எஸ்.எஃப் பெண் காவலர் கன்னத்தில் அறைந்தார். இந்தச் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. இதற்கான காரணம் குறித்து தெளிவாக விளக்கப்படவில்லை.

இந்நிலையில், கங்கனாவை தாக்கியது குறித்து பேசியிருக்கும் காவலர் குல்விந்தர் கவுர், “100 ரூபாய் காசுக்காக விவசாயிகள் போராட்டத்தில் பெண்கள் கலந்துகொள்கிறார்கள் என்று கங்கனா கூறியிருந்தார். அவரால் அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு உட்கார முடியுமா? கங்கனா இந்தக் கருத்தைச் சொல்லும்போது அந்தப் போராட்டத்தில் என் அம்மாவும் போராடிக் கொண்டிருந்தார்” எனத் தெரிவித்துள்ளார். இந்த வீடியோ வைரலாகி வருகிறது.

கங்கனாவை கன்னத்தில் அறைந்த காவலரான குல்விந்தர் கவுர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. காவலர் குல்விந்தர் கவுரை பொறுத்தவரை அவர் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக ஹரியாணா முதல்வர் நயாப் சிங் சைனி கூறும்போது “இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்” எனத் தெரிவித்துள்ளார். கடந்த 2020ம் ஆண்டு மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து விவசாயிகள் போராட்டம் நடத்தினர். அதில் குறிப்பிட்ட ஒரு போராட்டத்தை மேற்கொள்காட்டி அதிலிருக்கும் மூத்த விவசாய பெண்ணை குறிப்பிட்டு நடிகை கங்கனா தனது எக்ஸ் தள பக்கத்தில், “100 ரூபாய்க்காக அவர் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்” என குறிப்பிட்டிருந்தார்.



சி.ஐ.எஸ்.எஃப் பெண் பொலிஸ் விளக்கம்

இந்தப் பதிவு சர்ச்சையை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து அதனை தனது எக்ஸ் தள பக்கத்திலிருந்து கங்கனா நீக்கிவிட்டார்.

முன்னதாக தன்னை தாக்கியது குறித்து எக்ஸ் தள பக்கத்தில் வீடியோ வெளியிட்டுள்ள கங்கனா, “நான் நன்றாக இருக்கிறேன். விமான நிலையத்தில் நடைபெற்ற பாதுகாப்பு சோதனையின் போது அந்தச் சம்பவம் நடைபெற்றது. சோதனை முடிந்த பின், நான் செல்லும்போது அந்த பெண் காவலர் வேறு ஒரு கேபினில் அமர்ந்திருந்தார். நான் அவரைக் கடக்கும்போது அவர் என் முகத்தில் அடித்தார்; பின்பு என்னைத் திட்டினார்.

ஏன் இப்படி செய்தாய் என்று நான் அவரிடம் கேட்டேன், அதற்கு அவர், விவசாயிகளின் போராட்டத்துக்காகதான் இப்படி செய்தேன் என்றார். பஞ்சாபில் பயங்கரவாதம் அதிகரித்து வருவதும், இதை எப்படி கையாள்வது என்பதும் தான் எனக்கு கவலை அளிக்கிறது” எனத் தெரிவித்திருந்தார்.

# அமைச்சராகிறாரா அண்ணாமலை?

தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலையை ராஜ்ய சபா வழியாக அமைச்சராக்கும் எண்ணம் தேசிய பா.ஜ.க தலைமைக்கு இருப்பதாக கூறப்படுகிறது.

அண்ணாமலை 118068 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி கண்டுள்ளார். கோவை நாடாளுமன்ற தொகுதி இந்தியாவில் அதிகம் கவனிக்கப்பட்ட தொகுதி. அதற்குக் காரணம் அண்ணாமலை.

தேசிய அளவில் தமிழ்நாட்டில் பாஜகவை வளர்த்துவிட்டேன் என்று அண்ணாமலை சென்ற இடங்களில் எல்லாம் சொல்லிக்கொண்டு இருந்தார். ஆனால் அவரின் கோவை தொகுதியிலேயே பா.ஜ.க படுதோல்வி அடைந்து உள்ளது. இப்படிப்பட்ட நிலையில்தான் அண்ணாமலையின் தலைமை பதவி மாற்றப்படலாம் என்கிறார்கள்.

அண்ணாமலையை ராஜ்ய சபா வழியாக அமைச்சராக்கும் எண்ணம் தேசிய பாஜக தலைமைக்கு இருப்பதாக கூறப்படுகிறது. வேறு மாநிலங்களில் ராஜ்ய சபா வழியாக இவரை அமைச்சராக்க முடிவு செய்துள்ளார்களாம். இவர் அமைச்சர் ஆனால் ஒருவருக்கு ஒரு பதவி முறையில் தலைவர் பதவி பறிக்கப்படும். அதன் மூலம் எல். முருகன் அல்லது தமிழிசை சௌந்தரராஜன் மீண்டும் தலைவர் பதவிக்கு வரலாம் என்று கூறப்படுகிறது.

# அண்ணாமலை-தமிழிசை மோதல் தீவிரமடைகிறது!



பா.ஜ.க தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை முன்னாள் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் ஆகிய இருவருக்கும் இடையே மோதல் ஏற்பட்டு உள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

லோக்சபா தேர்தல் 2024 இல் தமிழ்நாட்டில் பா.ஜ.க தோல்வி அடைந்த நிலையில், அண்ணாமலை மீது கடுமையான விமர்சனங்கள் வைக்கப்பட்டு வருகின்றன.

தமிழக பா.ஜ.க கடந்த 2 வருடங்களில் பல இடங்களில் வளர்ந்துவிட்டதாக அண்ணாமலை தொடர்ந்து கூறி வந்தார். அப்படி இருக்க அண்ணாமலை மீது இயல்பாகவே பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. பா.ஜ.கவை தூக்கி நிறுத்திவிடுவார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

கண்டிப்பாக 25 சதவீதம் பெறுவோம். 9 இடங்களுக்கு மேல் வெல்வோம் என்றெல்லாம் பேசினார். ஆனால் இந்த பேச்சுக்கள் எல்லாம் வீணாகி உள்ளது. அண்ணாமலையின் பேச்சுக்கள் மிக மோசமான பின்னடைவையே கொடுத்துள்ளன. அந்தக் கட்சி ஒரு இடத்தில் கூட வெல்லவில்லை. பா.ஜ.க கூட்டணியில் ஏசி சண்முகம், சௌமியா அன்புமணி, ஓ பன்னீர்செல்வம், டிடிவி தினகரன், பாரிவேந்தர், நயினார் கண்டிப்பாக நல்ல வாக்கு வங்கியை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எல்லோரும் தோல்வியை தழுவி உள்ளனர்.

பா.ஜ.க தோல்வி காரணமாக அந்த கட்சிக்குள் பலர் அண்ணாமலை மீது வெறுப்பாகி உள்ளதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் தான் பா.ஜ.க தலைவர் அண்ணாமலை முன்னாள் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் இடையே மோதல் ஏற்பட்டு உள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டின் பா.ஜ.க செயல்பாடு குறித்து மூத்த தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் பேட்டி அளித்துள்ளார்.

“கூட்டணி வைக்கலாம் என்று நாங்கள் வியூகத்தை அமைத்தோம். அண்ணாமலைக்கு அதில் விருப்பம் இல்லை. அதனால் செய்யவில்லை. அண்ணாமலையிடம் அதை நீங்கள் கேட்கலாம். நான் மாநிலத் தலைவரை எதிர்க்கிறேன் என்று சொல்ல மாட்டேன். கூட்டணி அமைத்தால் வென்று இருப்போம் என்று கூறுகிறேன்” அவ்வளவுதான் என்றுள்ளார் தமிழிசை.

இருவருக்கும் இடையேயான மோதல் வெளியே தெரிய தொடங்கிவிட்டது. இந்த மோதலுக்கு பின்வரும் காரணங்கள் உள்ளதாக கூறப்படுகிறது.

1. அண்ணாமலை அ.தி.மு.க தலைவர்களை மோசமாக பேசினார். இது அ.தி.மு.க கூட்டணி உடைய காரணம்.
2. பா.ஜ.கவில் மூத்த தலைவர்களை அண்ணாமலை ஓரம்கட்டினார்.
3. தேர்தல் வியூகங்களை சரியாக வகுக்கவில்லை.
4. வேட்பாளர் தேர்வில் சரியாக செயல்படவில்லை.
5. தேர்தல் செலவினங்களில் முறைகேடு நடந்து இருக்கலாம் என்ற சந்தேகம்.
6. பா.ஜ.க சிரேஷ்ட தலைவர்களுக்கு எதிராக அண்ணாமலையே செயல்படுவதாக புகார்.
7. கட்சி நிர்வாகிகளையே அண்ணாமலையின் தரப்பு தாக்குவதாக புகார்.

இவ்வாறு பலதரப்பட்ட புகார்கள்தான் இந்த மோதலுக்கு காரணமாக மாறி இருக்கலாம் என்கிறார்கள்.

# பிரதமராக நாளை பதவியேற்கிறார் நரேந்திர மோடி





டெல்லியில் நாளை 9 ஆம் திகதி மாலை நரேந்திர மோடி இந்தியாவின் மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்க உள்ளார். இன்று 8 ஆம் திகதி பிரதமர் மோடி பதவியேற்பார் என சொல்லப்பட்டு வந்த நிலையில், பல்வேறு காரணங்களால் இவ்விழா ஒருநாள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதவியேற்பு விழாவில் தெற்காசியத் தலைவர்கள் பலர் பங்கேற்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 292 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இதில் பா.ஜ.க 240 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. மத்தியில் ஆட்சி அமைக்க 272 எம்.பி.க்களின் ஆதரவு தேவை என்பதால், பா.ஜ.கவுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால், கூட்டணி பலத்துடன் பா.ஜ.க ஆட்சிஅமைக்கிறது.

இந்நிலையில், பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் டெல்லியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. புதிய அமைச்சரவை பதவியேற்க ஏதுவாக 17 ஆவது மக்களவையை கலைக்க பரிந்துரைத்து இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை சந்தித்த மோடி, பிரதமர் பதவியை இராஜினாமா செய்யும் கடிதத்தையும், 17 ஆவது மக்களவையை கலைப்பதற்கான அமைச்சரவை கூட்டத்தின் பரிந்துரையையும் குடியரசுத் தலைவரிடம் வழங்கினார்.

பின்னர், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் பிரதமர் மோடியின் இல்லத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சந்திரபாபு நாயுடு, நிதிஷ்குமார், மகாராஷ்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, துணை முதல்வர் அஜித் பவார், லோக் ஜனசக்தி கட்சி தலைவர் சிராக் பாஸ்வான், மஜத தலைவர் எச்.டி. குமாரசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தின்போது, பிரதமர் மோடி தலைமையில் மத்தியில் மீண்டும் பா.ஜ.க அரசு அமைய, சந்திரபாபு நாயுடு, நிதிஷ் குமார் உள்ளிட்டோர் நிபந்தனையற்ற ஆதரவுக் கடிதத்தை பிரதமர் மோடியிடம் வழங்கினர். தேசிய ஜனநாயக கூட்டணி தலைவராக மோடி தெரிவு செய்யப்படுவதாகவும் இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் எம்.பிக்கள் கூட்டம் டெல்லியில் உள்ள பா.ஜ.க தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து பிரதமர் மோடி தலைமையில் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை சந்தித்து, ஆட்சி அமைக்க உரிமை கோரவிருந்தனர். அதைத் தொடர்ந்து பிரதமர் மோடி பதவியேற்பு விழா எதிர்வரும் 9 ஆம் திகதி மாலை நடைபெற உள்ளது. பிரதமர் மோடி 3 ஆவது முறையாக பதவி ஏற்பதன் மூலம், தொடர்ந்து 3 முறை பிரதமராக இருந்த முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் சாதனையை சமன் செய்கிறார்.

இந்நிலையில், மக்களவைத் தேர்தலில் தனிப்பெரும்பான்மை இல்லாத பா.ஜ.க மூன்றாவது முறையாக ஆட்சியமைக்க ஆதரவு தெரிவித்துள்ள ஐக்கிய ஜனதா தளம் மற்றும் லோக் ஜனசக்தி கட்சி (ராம் விலாஸ்) ஆகிய கட்சிகள் நிபந்தனைகளை முன்வைத்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய ஜனதா தளம் கட்சித் தலைவர் கே.சி.தியாகி அளித்த பேட்டியில், "அக்னிபாத் திட்டத்தை மறுபரிசீலனை செய்யுமாறு எங்கள் கட்சி கோரிக்கை வைத்துள்ளது. ஏனென்றால், அக்னிவீரர் திட்டம் தொடர்பாக வாக்காளர்கள் மத்தியில் கோபம் உள்ளது. எங்கள் கட்சி அந்தக் குறைபாடுகளை நீக்க வேண்டும் என்று விரும்புகிறது. மக்களுக்கு இந்தத் திட்டங்களில் ஆட்சேபனை உள்ளது.

## கூட்டணிக் கட்சிகளை சமாதானப்படுத்தி ஆட்சியைத் தொடர வேண்டிய நெருக்கடியில் பா.ஜ.க!

அதேபோல், காலத்தின் தேவையாக இருக்கும் சாதிவாரி கணக்கெடுப்பை நாடு முழுவதும் நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளோம்" என்று தெரிவித்தார்.

இதேபோல், பாஜகவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள மற்றொரு கட்சியான லோக் ஜனசக்தி கட்சி (ராம் விலாஸ்) தலைவரும் சிராக் பஸ்வானும், அக்னிபாத் திட்டத்தை மறு ஆய்வு செய்ய பா.ஜ.கவுக்கு நிபந்தனை வைத்துள்ளார். இது தொடர்பாக பேசிய சிராக் பஸ்வான், "அக்னிபாத் திட்டத்தை மறு ஆய்வு செய்வதற்கும், நாடு தழுவிய சாதிவாரி கணக்கெடுப்புக்கும் நான் ஆதரவாக இருப்பேன். எங்கள் கட்சி அக்னிபாத் திட்டத்தை மறு ஆய்வு செய்வதற்கும் மற்றும் சாதிவாரி கணக்கெடுப்புக்கும் அழுத்தம் கொடுக்கும்" என்று தெரிவித்தார்.

மத்தியில் பா.ஜ.க ஆட்சி அமைக்க, 16 இடங்களில் வெற்றி பெற்றுள்ள சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம் மற்றும் 12 இடங்களில் வெற்றி பெற்றுள்ள நிதிஷ் குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளம் (ஜேடியு) கட்சிகளும் நிபந்தனைகளை முன்வைத்து வருகின்றன.

அதேநேரம், இந்த 2 கட்சிகளையும் தங்கள் பக்கம் இழுத்து ஆட்சி அமைக்க இந்தியா கூட்டணி முயன்ற போதிலும் அது பலன் தரவில்லை.

இந்நிலையில் இரு கட்சிகளின் தலைவர்களும் டெல்லி அரசியலில் ஆட்சியைத் தீர்மானிப்பவர்களாக உருவெடுத்துள்ளனர். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட இவ்விரு தலைவர்களும் பா.ஜ.கவுக்கு ஆதரவளிக்க பல்வேறு நிபந்தனைகளை விதிப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

நிதிஷ் குமாரைப் பொறுத்தவரை மத்திய அமைச்சரவையில் 4 அமைச்சரவை, 1 இணை அமைச்சர் பதவி வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளதாக மூத்த தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

இந்தத் தேர்தல் முடிவுகள், மோடியின் தனிப்பட்ட செல்வாக்கைக் குறைத்திருப்பதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்துவரும் நிலையில், "பாஜக மொத்தமாக வென்ற இடங்களைவிட எதிர்க்கட்சிகள் குறைவாகத்தான் வென்றிருக்கின்றன" எனச் சுட்டிக்காட்டியிருக்கிறார் மோடி.

அதேவேளையில், கட்சிக்குள்ளும் வெளியிலும் மோடியின் செல்வாக்கு அதே நிலையில் நீடிக்கிறதா என்பது முக்கியமான கேள்வி. மத்திய அரசின் எந்தத் துறை தொடர்பான முடிவுகளும் பிரதமர் அலுவலகத்தில்தான் தீர்மானிக்கப்படும் என்கிற நிலைமை இனியும் தொடருமா என்பதும் கேள்விக்குறிதான்.

மாமனாரின் (என்.டி.ராமராவ்) முதுகில் குத்தியவர் என முன்பு சந்திரபாபு நாயுடுவைப் பகிரங்கமாக விமர்சித்த மோடி, இந்தத் தேர்தலிலும் தேர்தல் முடிவுக்குப் பின்னரும் அவருடன் நட்பு பாராட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

அதன் பிறகு, பெருந்தன்மையாக முதல்வர் பதவி நிதிஷுக்கு வழங்கப்பட்டிருந்தாலும், பா.ஜ.க அவருக்குத் தொடர்ந்து குடைச்சல் கொடுத்துவந்ததும் கவனிக்கத்தக்கது. ஆக, இனி நிதிஷ் குமாரை மிகுந்த கவனத்துடன் பா.ஜ.க அணுக வேண்டியிருக்கும்.

"இனிமேல் அணி மாற மாட்டேன். இனி பா.ஜ.க கூட்டணியில்தான் இருப்பேன்" என்று (இண்டியா கூட்டணியிலிருந்து வெளியேறி 'மீண்டும்' பா.ஜ.க பக்கம் வந்த பின்னர்) நிதிஷ் கூறியிருந்தாலும், அவர் நம்பகத்துக்குரியவரா என்பது அரசியல் வட்டாரத்தில் தவிர்க்க முடியாத கேள்வி.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக மோடி முன்னிறுத்தப்பட்ட தருணத்தில் (2013), "பிரிவினைவாதக் கொள்கை கொண்ட தலைவரான மோடியை நாடு ஏற்றுக்கொள்ளாது" என்று கூறி, கூட்டணியிலிருந்தே வெளியேறியவர் நிதிஷ். இந்த முறை பா.ஜ.கவுக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்கின்ற செய்திகள் வெளியானதும், "நிதிஷ் பிரதமர் பதவிக்கான தலைவர்தான்" என்று ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த மேலவை உறுப்பினர் காலித் அன்வர் பேசியது பரபரப்பை ஏற்படுத்தியது. உண்மையில், நீண்ட காலமாகவே அந்தக் கட்சியினர் இவ்வாறு பேசிவருகின்றனர்.

கூட்டணிக் கட்சிகளின் துணையுடன் ஆட்சி நடத்தவிருக்கும் பா.ஜ.க, முன்பைப் போல அவ்வளவு எளிதில் தனியார்மயமாக்கல், பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார் வசம் ஒப்படைத்தல் போன்ற நடவடிக்கைகளில் இறங்க முடியாது என எதிர்பார்க்கப்படுகிறது. வலுவடைந்திருக்கும் எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, அருகில் உள்ள கூட்டணிக் கட்சிகளும் மனது வைத்தால்தான் இனி முக்கிய மாற்றங்களைக் கொண்டுவர முடியும்.

மாநிலங்களவையில் பா.ஜ.கவின் நிலையும் கவனத்துக்குரியது. தற்போது தேசிய ஜனநாயகக் கூட்டணியைச் சேர்ந்த 117 உறுப்பினர்கள் மாநிலங்களவையில் உள்ளனர். 121 பேர் இருந்தால்தான் பெரும்பான்மை என்னும் சூழலில், கூட்டணிக் கட்சிகளை இன்னும் சில மாதங்களுக்கு அதிகமாகவே பா.ஜ.க சார்ந்திருக்க வேண்டியிருக்கும்.

# பிரதி மதுவரி ஆணையாளர் தங்கராஜா அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு

இலங்கை மது வரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளரும் (மனித வளம்) முன்னாள் கிழக்கு மாகாண மதுவரி திணைக்கள உதவி ஆணையாளருமான ரோட்டரியன் சண்முகம் தங்கராஜா தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெற்றார்.

அவருக்கு மது வரி திணைக்கள தலைமையகத்திலும் திருமலை மாகாண தலைமையகத்திலும் பிரியாவிடை நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.



சண்முகம் தங்கராஜா மதுவரித் திணைக்கள வரலாற்றில் கிழக்கு மாகாணத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பிரதி ஆணையாளர் என்ற பெருமையைப் பெற்றவர்.

இவர் மதுவரி திணைக்கள கிழக்கு மாகாண உதவி ஆணையாளராக செயற்பட்ட அதேவேளை, முழு இலங்கைக்கான பிரதி ஆணையாளராக பதில் கடமையையும் ஆற்றியிருந்தார்.

சண்முகம் தங்கராஜா பெரியகல்லாற்றை பிறப்பிடமாகவும், கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்டவர். ஆரம்பக் கல்வியை பெரியகல்லாற்றிலும், பின்னர் வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயம் மற்றும் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி ஆகியவற்றில் இடைநிலை உயர்நிலைக் கல்வியையும் பெற்று மதுவரி திணைக்களத்தில் மதுவரி பரிசோதகராக இணைந்து கொண்டார் .

32 வருட சேவைக் காலத்தில் கிழக்கு மாகாணத்தில் இருந்து முதன் முதலில் மதுவரி பிரதி ஆணையாளராக நியமனம் பெற்ற ஒரே ஒருவர் தங்கராஜா ஆவார்.

சிறந்த விளையாட்டு வீரரான தங்கராஜா கல்முனை ரோட்டரி கழக (PHF) தலைவராக இருந்து, தற்போது மட்டக்களப்பு றோட்டரி கழகத்தின் நிருவாகசபை உறுப்பினராக சமூக பணியாற்றி வருகிறார்.

முன்னர், அம்பாறை மாவட்டத்தின் கலால் அத்தியட்சகராக கடமையாற்றிய சண்முகம் தங்கராஜா கிழக்கு மாகாணத்தின் புதிய உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெற்று 01.01.2023 அன்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தார்.

அவர் கோட்டைமுனை விளையாட்டுக் கழகத்தின் உபதலைவராகவும், கோட்டைமுனை விளையாட்டுக் கிராமத்தின் பணிப்பாளர் சபை பிரதிநிதியாகவும் செயற்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)



# ஈரானின் புதிய ஜனாதிபதி முகமது மொக்பர்: அணு ஏவுகணைத் திட்டத்தால் மேற்குலகை திரும்பிப் பார்க்க வைத்த ஆளுமைத் தலைவர்!



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி ஹெலிகொப்டர் விபத்தில் கொல்லப்பட்டதன் பின்னர், அயதுல்லா அலி கமேனியால், முகமது மொக்பர் (Mohammad Mok hber) இடைக்கால ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

ஈரானில் அரசியலமைப்புச் சட்டத்தின் படி, 50 நாட்களுக்குள் புதிய ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அமைக்க வேண்டும். அதுவரை மொக்பர் இடைக்கால அதிபராக இருப்பார்.

ஈரானின் அணு மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைத் திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டதற்காக 2010 இல் ஐரோப்பிய ஒன்றியத்தால் பயணத்தடை விதிக்கப்பட்ட பட்டியலில் இவர் இருந்தார். ஆயினும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அவரின் பெயர் தடைப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது.

துணைத்தலைவர்களில் மொக்பரின் பதவி முதன்மையானது. மறைந்த ஜனாதிபதி மற்றும் இஸ்லாமிய புரட்சிகர காவலர் படை (IRGC) போன்ற உச்ச தலைவரின் அலுவலகத்துடன் அவருக்கு வலுவான தொடர்பு இருந்ததால் அவர் முக்கியமானவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அத்துடன் அவர் நிர்வாகத்தில் நீண்டகால அனுபவத்துடன் செயல்பட்ட ஆளுமை மிக்கவராகவும் காணப்பட்டார்.

தற்போது அமெரிக்காவை அச்சுறுத்தும் ஈரானின் அணுசக்தி என்பது பல ஆராய்ச்சித் தளங்கள், இரண்டு யுரேனியம் சுரங்கங்கள், ஒரு ஆராய்ச்சி அணு உலை மற்றும் மூன்று அறியப்பட்ட யுரேனிய செறிவூட்டல் நிலையங்கள் உள்ளிட்ட யுரேனியம் செயலாக்க வசதிகள் ஆகியவற்றை கொண்டது ஆகும்.

யார் இந்த முகமது மொக்பர்?

செப்டம்பர் 1, 1955 இல் பிறந்த முகமது மொக்பர் நாட்டின் உச்ச தலைவர் அலி கமேனியுடன் நெருங்கிய தொடர்பில் எப்போதும் இருந்ததுடன், அரசியல் அனுபவமிக்கவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



மறைந்த இப்ராஹிம் ரைசி ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு முகமது மொக்பர் 2021 ஆம் ஆண்டு முதல் துணை ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். அத்துடன் முகமது மொக்பர் ரஷ்யாவுடன் பல முக்கிய பேச்சுவார்த்தைகளுக்கு தலைமை தாங்கியுள்ளார்.

1979 இஸ்லாமிய புரட்சிக்குப் பிறகு கைவிடப்பட்ட சொத்துக்களை நிர்வகிக்கும், முதன்மை தலைவருடன் இணைந்த முதலீட்டு நிதியமான Setad நிறுவனத்திற்கு முகமது மொக்பர் தலைமை தாங்கினார்.

அதேவேளை முகமது மொக்பர், 2013இல் அணுசக்தி மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணை சோதனை ஆகியவற்றில் ஈடுபட்டதாக கூறி ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) தடைகளை எதிர்கொண்டார். ஆனால் பின்னர் 2012 ஆம் ஆண்டு இந்த பட்டியலில் இருந்து முகமது மொக்பர் நீக்கப்பட்டார்.

தென்மேற்கு மாகாணமான குசேயிஷ்தான் இல் உள்ள டீயிஷவுள் இல் பிறந்த 68 வயதான இவர் மின்பொறியியலில் கல்வி கற்று, சர்வதேச PhD பட்டமும் பெற்றவர். அவர் தனது வாழ்க்கையின் தொடக்கத்தில் வங்கி மற்றும் தகவல்தொடர்புகளில் தீவிரமாக இருந்தார். குசேயிஷ்தான் தொலைத்தொடர்பு ஆணையத்தின் தலைவராக செயல்பட்டார். பின்னர் 1990 களில் மாகாணத்தின் துணை ஆளுநராக பதவி உயர்வு பெற்றார்.

ஒகஸ்ட் 2021 இல் ரைசியால் முதல் துணைத் தலைவராக மொக்பர் நியமிக்கப்பட்டார். துணைத்தலைவராக, மொக்பர் பல்வேறு அரசாங்க வளர்ச்சித் திட்டங்களைத் தொடக்கி வைப்பதற்காக ஈரான் நாடு முழுவதும் பயணம் செய்தார். ஆயுத பரிமாற்றம் குறித்து ஆலோசிப்பதற்காக மூத்த இராணுவ மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் அவர் ரஷ்யாவுக்கு சென்றிருந்தார்.

துணை ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்பு, மொக்பர் ஈரானின் செட்டாட் அல்லது இமாம் கொமேனியின் உத்தரவை நிறைவேற்றுவதற்கான தொண்டு அமைப்பின் தலைவராக 14 ஆண்டுகள் பணியாற்றினார். கொவிட்19 இன் தொடக்கத்தின் போது, மத்திய கிழக்கில் தொற்றுநோயால் ஈரான் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில், மொக்பர் செட்டாட்டின் தலைவராக இருந்தார். உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின்படி, கிட்டத்தட்ட 150,000 பேர் ஈரானில் கொவிட் நோயால் இறந்தனர்.

அவரது கண்காணிப்பின் கீழ், செட்டாட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட முக்கிய கொரோனா வைரஸ் தடுப்பூசியான COVIran Barekat ஐ உருவாக்கியதில் முன்னின்றவர்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

## தொழிற்சங்கங்களுக்கு அடிபணிந்து...

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

லெகோ நிறுவனம் ஜே .ஆர் ஜயவர்தனவினால் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அந்நிறுவனத்தை விற்கையில் தொழிற்சங்கங்கள் ஆறு ஏழு நாட்களுக்கு தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொண்டன. பல்வேறு விடயங்களை அரச நிர்வாகத்தின் கீழ் இல்லாமல் தம்மிடம் வைத்துக் கொண்டு தமக்கு தேவையான வகையில் செயற்படுத்துவதே இடம்பெறுகிறது. இதற்கு இடமளிக்க முடியாது.

என்றாவது நாம் மேற்கொள்ள வேண்டியதை நிறைவேற்றியே ஆக வேண்டும். அந்த வகையில் துணிச்சலுடன் தீர்மானங்களை மேற்கொள்ளும் அமைச்சர் கஞ்சன விஜேசேக்கரவுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

இலங்கையில் மாத்திரமே மின்சாரத் துறை ஒரே ஏகபோக உரிமையின் கீழ் காணப்படுகிறது. ஏனைய நாடுகளில் மின்சார உற்பத்தி, விநியோகம், ஒழுங்குபடுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தனித் தனியே காணப்படுகின்றன. ஏகபோக உரிமையுள்ள இடத்திலேயே முறைகேடுகளும் மோசடிகளும் இடம்பெறுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## முப்படையிலுள்ள முஸ்லிம்களுக்கு...

இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானியிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய இந்த அறிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க, சவூதி அரேபிய தூதுவர் சவூதி அரசாங்கத்திடம் இருந்து அனுசரணை மற்றும் சிறப்பு கோட்டாக்களை பெறுவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்ததை தொடர்ந்து முதன்முறையாக முஸ்லிம் முப்படை வீரர்கள் ஐவருக்கு இந்த சிறப்பு கோட்டாக்கள் இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தென்னகோன், நேற்று (ஜூன் 07) சவூதி அரேபிய தூதுவர் அல்கஹ்தானியை கொழும்பில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்துடன்,

முப்படை முஸ்லிம் உறுப்பினர்களுக்கு இந்த வாய்ப்பை வழங்கியதற்காக சவூதி தூதுவருக்கும் விசேடமாக சவூதி அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் தென்னக்கோன் இந்தக் கோரிக்கையை முன்வைத்தமைக்கு நன்றி தெரிவித்த சவூதி அரேபிய தூதுவர், எதிர்வரும் ஆண்டுகளில் பாதுகாப்புப் துறை பணியாளர்களுக்கான ஒதுக்கீட்டை மேலும் அதிகரிப்பதில் தனது தனிப்பட்ட கவனத்தை செலுத்துவதாகவும் தெரிவித்தார். இதற்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் இலங்கை முஸ்லிம் பாதுகாப்புப் படையினருக்கும் 'உம்ரா' புனிதப் பயணத்தை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப் படும் என்றும் சவூதி தூதுவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, இலங்கையிலுள்ள அனைத்து சமூகங்களுக்கும் உதவுவதற்கு சவூதி அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும், இது தொடர்பில் இந்நாட்டு அதிகாரிகளுடன் நெருக்கமாகச் செயற்பட எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

இலங்கை ஹஜ் குழு உறுப்பினர் மில்பர் கபூர் மற்றும் ஹஜ் யாத்திரை மேட்கொள்ள தெரிவுசெய்யப்பட்டுள்ள பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் இராஜாங்க அமைச்சருடன் இந்நிகழ்வில் கலந்துக்கொண்டனர்.

## இலங்கை கடன் மறுசீரமைப்பு...

சில விடயங்களில் சீர்திருத்தங்கள் இன்னும் மேற்கொள்ளப்பட்டு வருதாகவும் சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.கடன் மறுசீரமைப்புக்கான அடுத்த கட்டங்கள் வெளிப்புற வணிகக் கடனாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்வதுடன் உத்தியோகபூர்வ கடன் வழங்குபவர்களுடன் கொள்கையளவில் ஒப்பந்தங்களை செயல்படுத்த வேண்டுமென்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, அதிகாரபூர்வ கடன் வழங்குநர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாகவும் வெளிப்புற உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுவருகின்றன. இதேவேளை சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடன் இறுதி ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. கடனீட்டுப் பத்திரத்தின் உரிமையாளர்களுடன் விரைவில கொள்கையளவில் உடன்பாடுகளை எட்டும் நோக்கத்துடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப் பட்டுவருகிறது.

சீன அபிவிருத்தி வங்கியுடனான இணக்கப் பாட்டு பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. வெளி வணிகக் கடன் வழங்குபவர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியும் என்ற பலமான எதிர்பார்ப்பு இருப்பதாக தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம் நிரல் அளவுருக்களுடன் இணக்கமானது விரைவில் எட்டப்படும் என்றும் நாணய நிதியம் தெரிவித்துள்ளது. மொத்தத்தில் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் போதுமான வலுவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடுவதாக சர்வதேச நாணய நிதியம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதயித்தின் ஊழியர்களும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில் கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான திட்டத்தின் இரண்டாவது மதிப்பாய்வை நிறைவு செய்வதற்கான பணியாளர் மட்டத்திலான உடன்பாடு எட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஹர்ஷ டி சில்வா...

கொடுப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவரான ஹர்ஷ டி சில்வாவை பதவி நீக்க வேண்டிய அவசியம் கிடையாது என சுட்டிக்காட்டிய அவர்,பொருளாதார பாதிப்பிலிருந்து நாடு மீள்வதற்கு குழுவினூடாக, ஹர்ஷ டி சில்வா சிறந்த ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் அரசாங்க நிதி தொடர்பான குழுவின் அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றிய ஹர்ச டி சில்வா எம்பி முன்வைத்த சில கூற்றுக்களுக்கு பதில் அளிக்கையிலேயே, அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.

ஹர்ஷ டி சில்வா தமது உரையின் போது,

அரச நிர்வாகத்தில் இடம்பெறும் மோசடிகளை சுட்டிக்காட்டுவதால் நான் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளேன்.தேவையாயின் என்னைப் பதவியிலிருந்து நீக்குங்கள்.ஆனால் பதவியில் இருக்கும் வரை எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய நான் செயற்படுவேன். பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவராக நான் நியமிக்கப்பட்டேன். குழுவின் தலைவர் பதவியிலிருந்து இரு தடவைகள் நீக்கப்பட்டேன்.எதிர்க்கட்சித் தலைவரின் கடுமையான வலியுறுத்தலைத் தொடர்ந்தே குழுவின் தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டேன்.

அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் பதவி வகிப்பதால் எவ்வித சிறப்புரிமையும் எனக்கு கிடைப்பதில்லை.குழுவின் பணிகளை முறையாக முன்னெடுப்பதற்கு அலுவலகமும், சேவையாளர்களும் கூட கிடையாது. குழுவின் அன்றாட நடவடிக்கைகளை முடித்து விட்டு , நாளாந்தம் அதிகாலை 2 மணிக்கே உறங்கச் செல்கிறேன். குழுவின் பணிகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கும் தரப்பினருக்கு சம்பளம் வழங்கப்படுவதில்லை. அவர்களுக்கு எனது சொந்த நிதியிலேயே சம்பளம் வழங்கியுள்ளேன். இவ்வாறு அந்த செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுப்பது சாத்தியமற்றது என்று தெரிவித்தார். இதற்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## நாட்டின் பொருளாதாரத்தை...

இணக்கப்பாட்டுடன் பயணிக்க வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, சரியான திட்டத்துடன் செயற்பட்டால் மாத்திரமே சரிவடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

ஜாஎல ஏக்கல பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் Cephalosporin ஊசி மற்றும் மெல்டோல் மருந்து உற்பத்தி தொழிற்சாலையை (06) திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

மெல்வா கூட்டு நிறுவனத்தின் கீழ் Sands Active தனியார் நிறுவனத்தினால் இந்த உற்பத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில், நிறுவனத்தின் பெயர் பலகையை திரைநீக்கம் செய்துவைத்த பின்னர் ஜனாதிபதி தொழிற்சாலையை மேற்பார்வையிட்டார்.

இதன்போது மெல்வா கூட்டு வியாபாரத்தின் தலைவர் பெரியசாமிபிள்ளை ஆனந்தராஜாவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசொன்றும் வழங்கப்பட்டது.

எதிர்காலம் நிலையற்றததென நினைக்கும் இளையோருக்காக அடுத்த மூன்று வருடங்களில் சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பல்வேறு துறைகளின் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு மெல்வா நிறுவனம் பங்களிப்புச் செய்து வருகின்றமைக்காக மெல்வா நிறுவனத்திற்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, அதனால் இந்நாட்டு இளையோருக்கு பல தொழில்வாய்ப்புக்கள் உருவாகியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"இன்று, Sands Active தனியார் நிறுவனம் மெல்டோல் எனும் புதிய மருந்து வகையை அறிமுகப்படுத்தியிருக்கிறது. இது தலைவலிக்கான மருந்தாகும். இந்த மருந்து உற்பத்திச் சாலைக்குள் புதிய மருந்து வகையை உற்பத்திச் செய்வதற்கான முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளமைக்கு வாழ்த்துக்கள்.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மருந்துகளை மீள் கொள்வனவு செய்வதற்கான வசதிகள் இருக்க வேண்டுமென வலியுறுத்தினார். அதன் பலனாகவே இன்று இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்படுகிறது.

இதன்மூலம் உள்நாட்டு சந்தைக்கு மருந்து விநியோகிக்கும் தொழிற்சாலையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. Sands Active தனது உற்பத்தியில் ஒரு பங்கை ஏற்றுமதி செய்யவும் ஆரம்பித்திருக்கிறது.

பெருமளவான தொழிற்சாலைகளை அவர்கள் ஆரம்பித்துள்ளனர். அவர்கள் மேலும் ஏற்றுமதியை நோக்கி நகர வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். இது ஒரு உதாரணமாக மட்டுமே உள்ளது. இலங்கையின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் வகையிலான பல்வேறு நிறுவனங்களையும், வியாபாரங்களையும் மெல்வான நிறுவனம் ஆரம்பித்திருக்கிறது. கடந்த சில நாட்களில் இந்த குழுமம் வெகுவாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அது சிறந்த வளர்ச்சியாகும்.

இந்த தொழிற்சாலைகள் வாயிலாக இளைஞர் யுவதிகளுக்கான பல தொழில் வாய்ப்புக்கள் உதயமாகியுள்ளன. இவ்வாறான நல்ல தொழில் துறைகள் நாட்டுக்கு அவசியம். தொழில் இன்மை நாட்டின் பெரும் பிரச்சினையாகியுள்ளது. குறைந்த வருமானம் பெறுவோரும் பெருமளவில் உள்ளனர். கொவிட் பரவல் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டில் புதிய தொழில்துறைகள் உருவாகவில்லை. 04 வருட தொழில் இன்மை பிரச்சினை உக்கிரமடைந்திருக்கிறது.

அதனால் தொழில் இன்மை மற்றும் வாழ்க்கைச் செலவை குறைக்கும் போராட்டத்தை எதிர்கொண்டுள்ளோம். 2019 ஆம் ஆண்டில் புள்ளிவிவரத் திணைக்களம் மேற்கொண்ட கணக்கெடுப்பில் 15 25 சதவீதம் வரையில் நாட்டின் வறுமை அதிகரித்திருப்பதாக தெரிய வந்துள்ளது. இந்நிலை தொடர்ந்தால் நாட்டில் இளையோருக்கு எதிர்காலம் இல்லாமல் போய் விடும். இளையோருக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதே எமது முதற் கடமையாகும். அதற்காக நாட்டில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும்.

நான் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற வேளையில் நாடு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருந்தது. இந்நிலையிலிருந்து மீண்டு வர 05 06 வருடங்கள் ஆகலாம் என்று பலரும் கூறினர்.

எதிர்காலம் இருக்காது என்று அஞ்சி பலரும் நாட்டை விட்டுச் சென்றனர். இருப்பினும் இரு வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை நல்ல நிலைக்கு கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருந்தது.

எந்த அளவு கஷ்டங்கள் இருந்தாலும், பொருளாதார நெருக்கடிகள் இருந்தாலும், சிறிது காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தி வலுவான வாழ்க்கைச் சூழலை கட்டியெழுப்ப வேண்டிய தேவை காணப்பட்டது. அதற்காகவே வற் வரி அதிகரிக்கப்பட்டது. அதனால் மக்கள் திட்டித் தீர்த்தனர்.

ஆனாலும் இரு வருடங்கள் முடியும் முன்பாகவே ரூபாவின் பெறுமதியைப் பலப்படுத்தி முன்னோக்கிச் செல்ல முடிந்தது.

கடந்த காலங்களில் நல்ல அறுவடை கிடைத்தது. நாட்டுக்கு சுற்றுலா பயணிகள் வர ஆரம்பித்தனர். நாட்டு மக்களின் முயற்சியினாலும், அரசாங்கத்தின் சரியான வேலைத்திட்டத்தின் பயனாகவும் முன்னோக்கிச் செல்ல முடிந்திருக்கிறது. நாட்டின் உண்மை நிலையை மறந்து விட்டு வேடிக்கை பேச்சு பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

## யாழ். கிளி...

நேற்றுக் காலை நடத்தினார். இக் லந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினரும், பிரதமரின் மகனுமான யதாமினி குணவர்த்தனவும், வடமாகாண பிரதம செயலாளர் இளங்கோவன் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும் இணைந்து கொண்டிருந்தனர்.

## தேசிய நல்லிணக்க...

இந்நியமனம் நிதி, சிறைச்சாலை அலுவலகம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேயதாச ராஜபக்சவினால் வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வினை வலுப்படுத்தல், சக இனங்களுக்கு இடையில் சமாதானம் மற்றும் சகவாழ்வை கட்டியெழுப்பும் நோக்கில் இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பணிகளை ஒருங்கிணைத்தல் அடிப்படையில் இப்பதவி வழங்கப்பட்டுள்ளது.

## கரன்னாகொடவின்...

விசாரிக்குமாறு சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலித்ததன் பின்னர் இந்த தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சஷி மகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் லஃபர் தாஹிர் முன்னிலையில் இதற்கு முன்னர் எடுத்துக்கொள்ளப்பட்டதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதன் போது முழு நீதிபதிகள் குழு முன்னிலையில் மனுவைக் எடுத்துக்கொள்வதற்கான கோரிக்கையை பரிசீலித்ததன் பின்னர் ,அது குறித்து முடிவெடுப்பதற்காக பிரதம நீதியரசருக்கு அனுப்பப்பட்டதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

மனுதாரருக்கு எதிரான உயர் நீதிமன்ற வழக்கு 3 நீதிபதிகள் கொண்ட குழாம்; முன் விசாரணைக்கு வருவதால், இந்த மனுவை மூன்று நீதிபதிகளுக்கும் மேற்பட்ட நீதிபதிகள் கொண்ட அமர்வு முன் பரிசீலிக்க வேண்டும் என்று அவர் நீதி மன்றத்தில் கோரியிருந்தார்.

இதற்கமைவாக , மனுவை விசாரிப்பதற்காக ஐந்து பேர் கொண்ட முழு அளவிலான நீதிபதிகளை நியமிக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கமைவாக எதிர்வரும் 25ம் திகதி மனுவை கவனத்தில் எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

2008ஆம் ஆண்டு கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் தமக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கின் விசாரணையை இடைநிறுத்துமாறு கோரி முன்னாள் கடற்படைத் தளபதி தாக்கல் செய்த மனுவில் பிரதிவாதியாக சட்டமா அதிபர் குறிப்பிடப் பட்டுள்ளார்.

இந்த ரிட் மனுவில் எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்புமாறும் மேலும், இது தொடர்பான குற்றச்சாட்டு வழக்கின் விசாரணையை நிறுத்தி வைத்து இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுதாரர் தனது மனுவில் கோரியிருந்தார்.

11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் கொலை செய்யப் பட்டமை தொடர்பில் விசேட மூவரடங்கிய கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தொடரப் பட்ட கடற்படைத் தளபதி அட்மிரால் ஓஃப் தப்லீட் வசந்த கர்ணாகொடவுக்கு எதிரான குற்றப்பத்திரிக்கை வழக்கின் விசாரணையை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.அப்போதைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஏ. எச். எம். டி.நவாஸ் மற்றும் நீதியரசர் சோபித ராஜகருணா ஆகியோர் இந்த இடைக்கால உத்தரவை பிறப்பித்தனர்.

வழக்கு விசாரணையை இடைநிறுத்துமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வசந்த கர்னாகொட தாக்கல் செய்த மனு மீதான விசாரணை முடியும் வரை இந்த இடைக்கால உத்தரவு அமுலில் இருக்கும்.

இந்த மனுவில் சம்பந்தப்பட்ட காணாமல் போன பிள்ளைகளின் பெற்றோர் சமர்ப்பித்த இடைக்கால மனுவை நீதிமன்றம் அனுமதியளித்தது.

பெற்றோர்கள் சார்பில் சட்டத்தரணி நுவான் போபகே ஆஜரானார். முன்னாள் கடற்படைத் தளபதி சார்பில் ஜனாதிபதியின் சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா ஆஜரானார்.

## குற்றச் செயல்களை...

நிலையக் குழுவின் களனிப் பிரதேச மத்திய நிலையத் திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் மேற்கண்டவாறு தெரிவித்தார். சமூக வலைத்தளங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சம்பவம் பற்றி அவர் பேசும்போது, தந்தையென அடையாளம் காணப்பட்ட நபர் ஒருவர், தனது குழந்தையை மனிதாபிமானமற்ற முறையில் தாக்குவதனைக் காண்பிக்கும் காணொளி பரவியது. அந்நபரை சட்டத்தின் முன்னிறுத்துமாறு அனைத்துத் தரப்பினரும் பல்வேறு சமூக அமைப்புகளும் கோரிக்கை விடுத்தன. இந்நிலையிலேயே சந்தேக நார் கைது செய்யப்பட்டார். மிக விரைவில் குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும்.

## நாட்டின் வங்குரோத்து நிலையை...

அரச நிதி முகாமைத்துவ சட்ட மூலம் கொண்டுவரப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்று ஆக்கபூர்வமாக உறுதிப்படுத்தி மீண்டும் நாடு வங்குரோத்து அடையாத நிலையை உருவாக்கிய வரலாற்றின் ஒரேயொரு தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் ஒத்துழைப்புக்கான உடன்பாட்டை மேற்கொண்டு நாட்டை மீண்டும் சுவாசிக்கச் செய்ய ஜனாதிபதியால் முடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டில் யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் நாட்டின் எந்த இடத்திலும் வாழக்கூடிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு கிழக்கில் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. வெளிநாட்டிலிருந்து பாரிய நிதி உதவியைப் பெற்றுக் கொண்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அந்த வகையில் அந்த மக்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்கனவே இருந்ததைவிட சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டன. அதற்கான கடனை தற்போது நாட்டின் அனைத்து மக்களும் செலுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் 2003 ன் கீழ் 3 இலக்க நிதி முகாமைத்துவ சட்ட மூலம் நாட்டின் வங்குரோத்து நிலையை இல்லாதொ ழிப்பதற்காகவே கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அனர்த்தங்களில் பாதிப்புற்றோருக்கு... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நிவாரண நடவடிக்கைகளில் ஒரு காலத்தில் சகல வீடுகளுக்கும் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. அரசாங்கத்தினால் அந்த காப்புறுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில் மதிப்பீடு செய்து பாதிப்புகளின் பெறுமதியை கணிக்கும்போது அது மிகக் குறைவானதாகவே காணப்படும். இவ்வாறு மதிப்பீடு செய்து மக்களுக்கு வழங்கப்படும் பிரதிபலன்கள் தொடர்பில் சிக்கல்கள் ஏற்படலாம்.

எனினும், தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் நாட்டில் உள்ள அனைத்து வீடுகளையும் அரசாங்கத்தினால் காப்புறுதி செய்ய முடியாது. மக்களுக்கு இழப்பீடு வழங்குதல் மற்றும் சேதமடைந்த வளங்களை சீரமைத்தல் என அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.ஒருபுறம் நாம் அரசாங்கத்தின் வளங்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டியுள்ளது.

வீதிகள், பாலங்கள் வடிகான்கள், பாடசாலைகள் போன்றவை இதில் உள்ளடங்குகின்றன.

மறுபுறம் அரசாங்கத்தின் பொருளாதார நிலைமையையும் சிந்திக்க வேண்டியுள்ளது.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கக்கூடிய இதற்கான வேலை திட்டங்களின் மட்டுப்படுத்தல் தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இவற்றை மிகவும் கவனமாக முன்னெடுக்க வேண்டும். முறையற்ற விதத்தில் அவற்றை முன்னெடுத்து மீண்டும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு வர முடியாது.இருந்தபோதும்,

பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். செலவுகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்திலேயே அதனை முன்னெடுக்க முடியும்.முடிந்தளவு அரசாங்கம் நட்டஈட்டை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும்.

முழு நாட்டிலும் ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பீடு செய்தே அரசாங்கம் தீர்மானம் எடுக்கும்.சபையில் சண்டித்தனம் காட்டி எதிர்க்கட்சி கேட்பதையெல்லாம் எம்மால் வழங்க முடியாது.

## இன்றைய பலன்கள்

(08.06.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
பொருளாதார நிலையில் திருப்தி காணப்படும். புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். நண்பர்கள் நல்ல தகவலை கொண்டு வந்து சேர்ப்பார்கள்.

**ரிஷபம் :**
குடும்ப ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தவர்கள் உங்களை விட்டு விலகுவர். பொருளாதாரம் உச்சநிலை அடையும்.

**மிதுனம்:**
சுப விரயங்கள் அதிகரிக்கும். பெண் பிள்ளைகளின் கல்யாணம் சம்பந்தமாக சீர்வரிசை பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:**
வரவும் செலவும் சமமாகும். வாழ்க்கை தேவைகள் படிப்படியாக பூர்த்தியாகும். உறவினர்களின் அனுசரிப்பு கொஞ்சம் குறையும்.

**சிம்மம்:**
எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். வருமானம் உயரும். வியாபாரம் வெற்றி நடை போடும்.

**கன்னி:**
தனவரவு தாராளமாக வந்து கொண்டே இருக்கும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு உண்டு. குல தெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:**
நிகழ் கால தேவைகள் பூர்த்தியாகும். பண நெருக்கடி அகலும். வருமானம் உயர நண்பர்கள் வழிகாட்டுவர். வியாபாரம் சம்பந்தமாக வெளிநாடு செல்லும் வாய்ப்பு உருவாகும்.

**விருச்சிகம்:**
எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். தொழில் வளர்ச்சி உச்சத்தை அடையும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளிநாட்டு வணிகம் ஆதாயம் தரும்.

**தனுசு:**
கடன் சுமை கூடுவதால் கவலைகளும் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**மகரம்:**
பிள்ளைகளால் பெருமை உண்டு. படித்து முடித்தும் பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கவில்லை என்று கவலை பட்டவர்களுக்கு இப்பொழுது அந்த கவலை அகலும்.

**கும்பம்:**
பெற்றோர் வழியில் தொழிலுக்கான ஆதரவு கிடைக்கும். பழைய வாகனங்களை கொடுத்துவிட்டு புதிய வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

**மீனம்:**
இந்த நேரத்தில் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு செயல்பட வேண்டியது அவசியம். விலை உயர்ந்த பொருட்களை விற்கும் சூழ்நிலை உருவாகும். இடம், பூமியால் ஏதேனும் பிரச்சினைகள் வரலாம்.

## பிரதமர் மோடியின்...

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பதவியேற்பு விழாவில் பங்கேற்கவிருப்பதை ஏற்கெனவே உறுதிப்படுத்தியுள்ளனர். அவர்களை தொடர்ந்து நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹால், பூடான் பிரதமர் ஷெரிங் டோப்கே மற்றும் மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜக்நாத் ஆகியோருக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன. மக்களவை தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 292 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இதில் பாஜக 240 இடங்களை கைப்பற்றியுள்ளது. மத்தியில் ஆட்சி அமைக்க 272 எம்.பி.க்களின் ஆதரவு தேவை. பாஜகவுக்கு தனிபெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால், கூட்டணி பலத்துடன் பாஜக ஆட்சிஅமைக்கிறது. பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் டெல்லியிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. புதிய அமைச்சரவை பதவியேற்க ஏதுவாக 17ஆவது மக்களவையை கலைக்க பரிந்துரைத்து இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை சந்தித்த மோடி, பிரதமர் பதவியை இராஜினாமா செய்யும் கடிதத்தையும், 17ஆவது மக்களவையை கலைப்பதற்கான அமைச்சரவை கூட்டத்தின் பரிந்துரையையும் குடியரசுத் தலைவரிடம் வழங்கினார். அவரது இராஜினாமாவை ஏற்றுக்கொண்ட குடியரசுத் தலைவர், புதிய அரசு அமையும் வரை பதவியில் தொடருமாறு பிரதமரையும், மத்திய அமைச்சரவை குழுவையும் கேட்டுக் கொண்டார்.

பின்னர், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் பிரதமர் மோடியின் இல்லத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சந்திரபாபு நாயுடு, நிதிஷ் குமார், மகாராஷ்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, துணை முதல்வர் அஜித் பவார், லோக் ஜனசக்தி கட்சி தலைவர் சிராக் பாஸ்வான், மஜத தலைவர் எச்.டி. குமாரசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில்,பிரதமர் மோடி தலைமையில் மத்தியில் மீண்டும் பாஜக அரசு அமைய, சந்திரபாபு நாயுடு, நிதிஷ் குமார் உள்ளிட்டோர் நிபந்தனையற்ற ஆதரவு கடிதத்தை பிரதமர் மோடியிடம் வழங்கினர்.

## மின்சார கட்டணக் குறைப்பு...

கண்டிருக்க முடியாது. மின்கட்டணம் திருத்தம் தொடர்பான யோசனையை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்வைப்போம்.

நான்கு மாதங்களுக்கு ஒருமுறை மின்கட்டணத்தை திருத்தம் கொள்கை உள்ளது.இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## மாத்தளை, கொழும்பில்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் ஜூலை 15 க்கு முன்னர் திறந்து வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்தார்.

ஒரு சில விளையாட்டு சம்மேளனங்களில் நிலவும் சட்ட சிக்கல்களைத் தீர்த்து, விளையாட்டுத்துறையில் புதிய யுகத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

### வேப்பையடி கலைமகள் வித்தியாலயத்துக்கு

# புதிய ஸ்மார்ட் கணினி ஆய்வு கூடம் திறந்து வைப்பு

(பெரியநீலாவணை விசேட நிருபர்)



சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட நாவிதன்வெளி வேப்பையடி கலைமகள் வித்தியாலயத்தில் புதிய ஸ்மார்ட் கணினி ஆய்வு கூடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் கே.தியாகராஜா தலைமையில் (7) நடைபெற்றது.

இலங்கை Citizens Development Business Finance நிறுவனம் வசதி குறைந்த பாடசாலை மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுத்து வரும் வேலைத் திட்டத்தின் கீழ் ரூ.40 இலட்சம் செலவில் மாணவர்களுக்கான கணினி ஆய்வு கூடம் கையளிக்கப்பட்டது.

இதில் CDB நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மகேஷ் நாணயக்கார பிரதம அதிதியாக கலந்து கொண்டு கணினி ஆய்வு கூடத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.ஏ.சி.என். நிலோபா, பிரதி கல்வி பணிப்பாளரும் நாவிதன்வெளி கோட்டக்கல்வி பணிப்பாளருமான பி.பரமதயாளன், பிரதி கல்வி பணிப்பாளர்களான ஏ.எம். சியாத், என்.எம். நாஸிர் அலி, வேப்பையடி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ரணவீர உட்பட கல்வி அதிகாரிகள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

## கிழக்கின் குரல்

# திராய்மடுவில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம்



மட்டக்களப்பு திராய்மடுவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மாவட்ட செயலக வளாகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய ஆவர்த்தன அஸ்ட பந்தன ஏக குண்ட பக்ஷ நூதன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் நாளை நடைபெறவுள்ளது.

நேற்று மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து, காலை 8.00 மணிக்கு ஊர்வலம் ஆரம்பித்து, காலை 10 மணியளவில் புதிய மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தை சென்றடைந்தது. அதனைத் தொடர்ந்து இரண்டாம் நாள் ஆகிய இன்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு விநாயகர் வழிபாடும், புண்ணியாக வாசனம், அதனைத் தொடர்ந்து யாக பூசை, விசேட திரவிய ஹோமம், தீபாராதனை, திருமுறைப் பாராயணம் மற்றும் காலைப் பூசை என்பன நடைபெறவுள்ளதுடன் காலை 8.00 மணி முதல் விநாயகப் பெருமானுக்கு எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வு மாலை 4.00 மணி வரை நடைபெறவுள்ளது.

# கட்டுத்துவக்கை வைத்திருந்த நபர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை

(தோப்பூர் குறூப் நிருபர்)

ஈச்சிலம்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் சட்டவிரோதமாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கட்டுத்துவக்கினை வைத்திருந்ததாக ஈச்சிலம்பற்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மூதூர் நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்டார். இதனை தொடர்ந்து சந்தேகநபரை ரூ.5000 பிணையில் விடுதலை செய்து நீதவான் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது.

சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கட்டுத்துவக்கினை முறைப்படி அழிப்பதற்கு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

# 'வெல்வோம் ஸ்ரீலங்கா' என்னும் தொனிப்பொருளில் மாபெரும் நடமாடும் சேவை

## அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆரம்பித்து வைத்தார்

(திருகோணமலை தினகரன் நிருபர்)



தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் 'வெல்வோம் ஸ்ரீலங்கா' என்னும் தொனிப்பொருளில் அமைந்த நடமாடும் சேவை நேற்று(7), திருகோணமலை மக்ஹேசியர் விளையாட்டரங்கில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான வழிகாட்டலுக்கமைய, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மாவட்ட மட்டத்தில் நடாத்தும் 16 ஆவது நடமாடும் சேவை இதுவாகும்.

வடக்கு,கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் 15 மாவட்டங்களில் இந்த நடமாடும் சேவை இதுவரை நடாத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேல் வேலைவாய்ப்புக்கு செல்வதற்கான பதிவுகளை மேற்கொள்ளல், ஏனைய வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பதிவுகளை செய்தல், வெளிநாடுகளில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் பெறுதல் மற்றும் தொழிற்தகமை இருந்தும் உரிய சான்றிதழ் இன்றி இருப்போருக்கு தகமைச்சான்றிதழ் வழங்குதல் ஆகிய சேவைகளை உரியவர்களுக்கு உடனடியாக வழங்குவதற்காக இந்த நடமாடும் சேவை நடாத்தப்படுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. நேற்றும்,இன்றும் நடைபெறும் இந்நிகழ்வில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த பெருந்தொகையான இளைஞர்கள் யுவதிகள் பங்குபற்றி சேவைகளை பெற்று வருகின்றனர்.

நடமாடும் சேவைக்கான பிரதான அனுசரணையை இலங்கை வங்கி வழங்குகின்றது.

இலங்கையின் முன்னணி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் நடமாடும் சேவை நடைபெறும் இடத்தில் காட்சிக்கூடங்களை அமைத்துள்ளன.

ஆரம்ப நிகழ்வில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அத்தாவுல்லா, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் மாகாண மட்ட உயர் அலுவலர்கள் ஆகியோரும் பங்குபற்றினர்.

# கயிலைப் புனிதர் முனைவர் சாந்தலீங்க மருதாசலம் அடிகளார் ஐரோப்பிய நாடுகளுக்கு ஆன்மிகப்பயணம்

(காரைதீவு குறூப் நிருபர்)



பேரூர் ஆதீனம் 25வது குரு மகாசன்நிதானம் கயிலைப் புனிதர் முனைவர் சாந்தலீங்க மருதாசலம் அடிகளார் ஐரோப்பிய நாடுகளுக்கு ஆன்மிகப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

2 வது உலக முருக பக்தி மஹாநாட்டை, உலகில் உள்ள முருகன் ஆலயங்கள், ஆதீனங்கள், மடாலயங்கள், சந்நிதானங்களை இணைத்து, சுவிஸ் நாட்டில் மிகச்சிறப்பாக நடாத்தியவரும் செங்காளன் கதிர்வேலாயுதசாமி ஆலயத்தின் முன்னாள் தலைவருமான வேலுப்பிள்ளை கணேசகுமாரின் ஏற்பாட்டில் சுவிட்ஸர்லாந்து, ஜேர்மனி, ஒஸ்திரியா போன்ற நாடுகளிலுள்ள ஆலயங்கள் ஆச்சிரமங்களுக்குச் சென்று ஆசிகளை வழங்கி வருகின்றார்.

# களுதாவளை தேசிய பாடசாலையில் 47 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல தகுதி

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

க.பொ.த உயர்தரப்பெறுபேறுகளில் களுதாவளை மகா வித்தியாலயத்தில் 47 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

அதற்கமைய உயிரியல் விஞ்ஞானம் 3, பௌதீக விஞ்ஞானம் 3, பொறியியல் தொழில்நுட்பம் 6, உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் 12, வர்த்தகப் பிரிவு 9, கலைப் பிரிவு 14 ஆகிய துறைகளிலிருந்து மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு செல்ல தகுதிபெற்றுள்ளனர்.

இதேவேளையில் இப்பாடசாலையில் உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் பிரிவில் மாணவி சுப்பிரமணியம் கஜானி 3 ஏ பெற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாம் நிலையில் சித்திபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கின் உதயம்

# யாழில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவக உரிமையாளருக்கு அபராதம்

(பருத்தித்துறை நிருபர்)

யாழ்ப்பாணம் ஏழாலை பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் உணவு கையாளும் நிலையமொன்றை நடாத்திய உரிமையாருக்கு ரூ. 15 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஏழாலை பகுதியில் பொது சுகாதார பரிசோதகரால் முன்னெடுக்கப்பட்ட திடீர் பரிசோதனையில் சுகாதார மற்ற முறையில், சுகாதார சீர்கேட்டுடன் உணவு கையாளும் நிலையமொன்றை இயங்கி வந்த அதன் உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நீதிமன்றத்தில் ஆஜராகிய உரிமையாளர் தன் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதையடுத்து, 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த உரிமையாளரை கடுமையாக நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

அதேவேளை கடந்த வாரம் சுன்னாகம் பகுதியிலுள்ள உணவு கையாளும் நிலையமொன்றில் காலாவதியான மற்றும் உடல்நலத்திற்கு தீங்கு ஏற்படுத்தக் கூடிய உணவுப்பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக உரிமையாளருக்கு 83 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு, கிழக்கு, மலையக மாணவர்களுக்காக கல்வியியலாளர்கள் ஒன்றிணைய வேண்டும்

## ஆறு. திருமுருகன் அழைப்பு

(கரவெட்டி தினகரன் நிருபர்)



வடக்கு, கிழக்கு, மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக கல்வியலாளர்கள் ஒன்றிணைய வேண்டுமென கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளியான உயர்தர பரீட்சை பெறுபேறு தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கில் கல்வி பெறுபேறு அதிகரித்துள்ளமை பாராட்டத்தக்கது. அண்மையில் வெளியான உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறு வடக்கு மாகாணத்தை பொறுத்த வரையில் மனதுக்கு திருப்தி தருகின்றது. இந்த முயற்சிகளை எடுத்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கு பாராட்டுகள். வடக்கின் கல்வி தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இருந்தபோதிலும் இவற்றைப் பொருட்படுத்தாது பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கூடிய கவனம் எடுத்து ஆர்வம் காட்டியமை பாராட்டத்தக்கது.

இன்று மலையக மாணவர்கள் கல்வியில் சிறந்த பெறுபேறுகளை பெற்று வருகின்றனர். இந்த மாணவர்களின் விஞ்ஞான துறை வளர்ச்சிக்கு முறையான திட்டமிடல்களை மேற்கொண்டு அவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற கல்வித்துறை சார்ந்தவர்கள் உழைக்கவேண்டும்.

இதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணம், மலையக கல்வி அபிவிருத்தி தொடர்பாக கூட்டுப்பொறுப்பாக கல்வி சார்ந்த அறிஞர்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். வடக்கு, கிழக்கு, மலையகம் ஒன்றிணைந்து மாதிரி பரீட்சை வினாத்தாள்களை புலமை வாய்ந்தவர்கள் தயாரித்து அச்சிட்டு நிறுவனங்கள் அவற்றை இலவசமாக வழங்கி தமிழ் மாணவர்களின் கல்விக்கு அபிவிருத்திக்கு உதவி செய்யவேண்டும்.

வடக்கு கிழக்கு மலையக கல்வியாளர்கள் ஒன்றிணைந்து தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஒன்றிணைந்து செயல்படுத்துவதற்கு திட்டமிடல்களை செய்ய வேண்டும் என்றார்.

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகராக டொக்டர் காண்டீபன்

(சாவகச்சேரி விசேட நிருபர்)



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் த.காண்டீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றிய வைத்தியர் திஎஸ்.குமாரவேல் அண்மையில் இடமாற்றம் பெற்றுள்ளமையால் புதிய அத்தியட்சகராக காண்டீபன் கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம்

(யாழ். விசேட நிருபர்)



வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை மதியம் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

கொடியேற்றத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் மாலை சாந்தி கிரியைகள் நடைபெற்றது. நேற்றைய தினம் அதிகாலை பூஜை வழிபாடுகளை தொடர்ந்து மதியம் கொடியேற்றம் நடைபெற்றது.

தொடர்ந்து 15 நாட்கள் மகோற்சவ திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 20ஆம் திகதி காலை தேர் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்த திருவிழா நடைபெற்று மாலை, கொடியிறக்கத்துடன் மகோற்சவ திருவிழாக்கள் நிறைவுபெறும்.

ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களின் நலன் கருதி இம்முறையும் யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் இடையில் விசேட பஸ் சேவையும் படகு சேவைகளும் இடம்பெறும்.

அத்துடன் அமுதசுரபி அன்னதான மடத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். ஆலய சூழல்களில் பக்தர்களின் நலன் கருதி சாரணர்கள், சென் ஜோன் அம்புலன்ஸ், சென்சிலுவை சங்கம் மக்கள் நலன் புரி சங்கம் உள்ளிட்டவற்றின் தொண்டர்களும் சேவைகளில் ஈடுபடுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் கையளிப்பு

(யாழ். விசேட நிருபர்)



கனடா செந்தில்குமரன் நிவாரண நிறுவனத்தின் அனுசரணையில் ரூ.64இலட்சம் பெறுமதியான இரண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நிர்வாகத்திடம் நேற்றையதினம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் எஸ்.குமரவேல் மற்றும் புதிய வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் த.காண்டீபன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைக்கான கனடா நாட்டின் உயர்ஸ்தானிகர் எரிக் வாஸ் கலந்து கொண்டு வைத்திய உதவிப் பொருட்களை கையளித்திருந்தார்.

மேலும் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் பத்திரன, யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், செந்தில்குமரன் நிவாரண நிறுவன ஸ்தாபகர் திரு.டி.செந்தில்குமரன், யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம் மற்றும் போதனா மருத்துவமனையின் ஆலோசகர் வைத்தியர் ஆ.தங்கராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களின் உதவியுடன் நாளாந்தம் 4 நோயாளர்களுக்கு இரத்த சுத்திகரிப்பு சேவையை வழங்க முடியுமென வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்தது.

# யாழ். மாவட்ட டெங்கு கட்டுப்பாட்டு குழுக்களை ஸ்திரப்படுத்த நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராம மட்ட டெங்கு கட்டுப்பாட்டு குழுக்களை ஸ்திரப்படுத்தி அதன் மூலம் கிராமிய மட்டத்தில் விழிப்புணர்வு சார்ந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றைய தினம் வியாழக்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.அதன் போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட பதில் செயலர் கருத்து தெரிவிக்கும் போது,

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தை கவனத்தில் கொண்டு இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், புள்ளிவிபரங்களின் அடிப்படையில் 2024 ஜனவரி முதல் இன்றுவரை 4729 பேர் டெங்குநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு மரணமும் பதிவாகியுள்ளதாகவும், முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது அரையாண்டில் டெங்குநோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

மக்களிடத்து விழிப்புணர்வினை ஏற்படுத்துவதோடு மட்டுமில்லாது, வலயக் கல்வி பணிப்பாளர்கள் , பாடசாலை அதிபர்களுடனும் கலந்துரையாடி மாணவர்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களை வளப்படுத்த வேண்டும்.

அதற்கு, அனைத்து துறைசார் அதிகாரிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் எதிர்காலத்தில் டெங்குநோய் பரவுவதை கட்டுப்படுத்த முடியும் என மாவட்ட பதில் செயலர் தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் யூலை மாதம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள கிராம மட்ட டெங்கு கட்டுப்பாட்டு குழுக்களை ஸ்திரப்படுத்தி அதன் மூலம் கிராமிய மட்டத்தில் விழிப்புணர்வு சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

# வீட்டுப் பயனாளர்கள், சிறு வணிகங்களுக்கு Smart Tank பிரிண்டர்களை அறிமுகப்படுத்தும் HP



வீட்டுப் பயனாளர்கள், நுண் மற்றும் சிறு வணிகங்களின் அன்றாட அச்சிடும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட புதிய *Smart Tank* பிரிண்டர்களை *HP* அண்மையில் வெளியிட்டுள்ளது. இன்றைய ஹைபிரிட் உலகில், மலிவு விலையிலும், பயனர் நட்பு மிக்கதான அம்சங்களுடன் மாத்திரமன்றி ஸ்மார்ட் பிரிண்டிங் தீர்வுகளுடன் கூடிய அச்சிடும் தீர்வுகளுக்கான தேவையும் அதிகரித்து வருகின்றது.

அதிகரித்து வரும் தொழில்முனைவோர் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு உதவியாக, தங்கு தடையின்றி அமைத்துக் கொள்ளக் கூடிய செயன்முறைகள், ஸ்மார்ட் அம்சங்கள், மேம்படுத்தப்பட்ட இணைப்புகளை ஏற்படுத்தக் கூடிய தெரிவுகள் மூலம் உரிய தேவையை அறிந்து, *HP Smart Tank* பிரிண்டர்கள் மேம்பட்ட பயனர் அனுபவத்தை வழங்குகின்றன. சுய செயற்பாட்டுக்கான *WiFi* திறன்கள், ஸ்மார்ட் செயலி மற்றும் ஸ்மார்ட்டான மேம்பட்ட அம்சங்களை உள்ளடக்கிய எளிதாக்கப்பட்ட மேம்பட்ட செயற்பாடு ஆகிய வசதிகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. *HP* இன் *Smart Tank* புதிய பிரிண்டர்கள், முன்கூட்டியே நிரப்பப்பட்ட மை மூலம் 6,000 கறுப்பு வெள்ளை பக்கங்களை அல்லது 6,000 வண்ணப் பக்கங்களை பிரிண்ட செய்யும் ஆற்றல் கொண்ட, தடையின்றி அச்சிடுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த பிரிண்டர்கள் புதிய சென்சர் அடிப்படையிலான *Ink Tank* தொழில்நுட்பம் மூலம் இயக்கப்படுவதால், இது மை தீர்ந்து போவதற்கு முன்பாகவே பயனர்களை எச்சரிக்கின்றன. தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளில் பயனர்களுக்கு *duplex* பிரிண்டிங் மேலதிக வசதியும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் தாளின் இரு புறமும் தன்னிச்சையான முறையில் அச்சிட முடியும்.




# பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வணிக மீட்புக்கு ஒத்துழைப்பு வழங்கும் HNB

*HNB PLC* 2024 முதல் காலாண்டில் வரிக்கு முந்தைய இலாபமாக *(PBT)* 9.8 பில்லியன் ரூபாவைப் பதிவு செய்தது, அதே சமயம் வரிக்குப் பிந்தைய லாபம் *(PAT)* 6.2 பில்லியன் ரூபாவாகும். குழு மட்டத்தில், வரிக்கு முந்தைய இலாபம் *(PBT)* மற்றும் வரிக்குப் பிந்தைய இலாபம் *(PAT)* முறையே 11.2 பில்லியன் ரூபா மற்றும் 7.4 பில்லியன் ரூபாவாக அமைந்திருந்தது.

பொருளாதாரத்தை புத்துயிர் பெறுவதற்காக இலங்கை மத்திய வங்கியின் கணிசமான பணவியல் கொள்கை தளர்த்தலின் விளைவாக, மார்ச் 2024 வரையிலான 12 மாத காலப்பகுதியில் சராசரி எடையுள்ள அத்தியாவசிய கடன் விகிதத்தில் *(AWPLR)* 21.40% இலிருந்து 10.69% ஆக 50% வீழ்ச்சி ஏற்பட்டது. இதன் காரணமாக வட்டி வருமானம் 20% குறைந்து 60.2 பில்லியன் ரூபாவாக இருந்தது. மறுமதிப்பீடு வைப்புகளில் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக வட்டிச் செலவு 13% ஆண்டுக்கு 38.2 பில்லியன் ரூபாவாக குறைந்துள்ளது. பொருளாதாரத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய துறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வங்கி கணிசமான வட்டி தள்ளுபடிகளையும் வழங்கியது. இதன் விளைவாக, நிகர வட்டி வருமானம் 2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஆண்டுக்கு *(YoY)* 30% குறைந்துள்ளது.

இந்த செயல்திறன் குறித்து கருத்து தெரிவித்த *HNB PLC* இன் தலைவர் நிஹால் ஜயவர்தன, "பெரும்பொருளாதார குறிகாட்டிகளில் பிரதிபலிக்கும் வகையில், நாடு அதன் மீட்புப் பாதையில் வலுவான மற்றும் நிலையான முன்னேற்றத்தை அடைந்து வருவதை கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். வங்கித் துறையின் நலனைப் பாதுகாத்து, நாட்டின் வளர்ச்சி வாய்ப்புகளை மேம்படுத்தும் வகையில், வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டமும் விரைவில் முடிவடையும் என்று நான் நம்புகிறேன்."

"HNBஇல் நாங்கள் மூன்று முக்கிய தலைவர்களை பணிப்பாளர் சபைக்கு நியமிப்பதன் மூலம் எங்கள் நிர்வாக கட்டமைப்பை மேலும் பலப்படுத்தியுள்ளோம். 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் *HNB* இன் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக திரு தமித் பல்லேவத்த கடமைகளை பொறுப்பேற்கவுள்ள நிலையில், எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் மதிப்பை அதிகரிப்பதற்கான எமது அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்." என தெரிவித்தார்.

# புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் முக்கியத்துவம்; வலியுறுத்தும் தேசிய சுற்றாடல் ஒன்றியம்

பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் தலைமையிலான தேசிய சுற்றாடல் ஒன்றியம், இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகார சபையின் *(SLSEA)* தலைவரிடம் அண்மையில் அறிக்கை ஒன்றை கையளித்துள்ளது.



போதிய சூரிய ஒளி, உயிரியல் கழிவுகள், காற்றாலை, நீர் மூலங்களைக் கொண்ட இலங்கையானது, புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை உற்பத்தி செய்வதற்கான முக்கிய ஆற்றல்களைக் கொண்டுள்ளது என்பதை, அவர்கள் இந்த அறிக்கையில் வலியுறுத்துகின்றனர். இந்த இயற்கை வளங்களை வலுசக்திக்காக பயன்படுத்த நாட்டின் புவியியல் அமைவிடம் ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது.

ஆயினும், புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையானது, புதிய தொழில்நுட்பங்களின் பற்றாக்குறை, போதிய அளவில் புதிய திட்டங்களின் ஸ்தாபிக்கப்படாமை மற்றும் நிலையற்ற நிதி உள்ளிட்ட முக்கிய சவால்களை எதிர்கொள்கிறது. நாட்டின் சமீபத்திய மின்சாரத் தடை மற்றும் தற்போதைய மின்சார பிரச்சினைகளால் இந்த சிக்கல்கள் மேலும் அதிகரித்துள்ளதோடு, இது பொருளாதாரத்திற்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சவால்களை எதிர்கொள்ளவும், புதிய புதுப்பிக்கத்தக்க மின்சக்தி திட்டங்களில் முதலீட்டை ஊக்குவிக்கவும், ஆக்கபூர்வமான உத்திகள், சிறந்த திட்டங்கள், புதிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகள், தனித்துவமான ஊக்குவிப்புத் தொகைகள் உள்ளிட்ட விடயங்களை உருவாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும். இந்த நடவடிக்கைகளானவை நுகர்வோர் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறுவதை ஊக்குவிக்கும் என்பதுடன் இத்துறையின் வளர்ச்சியை துரிதப்படுத்தும்.

தெளிவான பலன்கள் இருந்தபோதிலும், பல்வேறு குறுகிய நோக்கங்களை நியாயப்படுத்தி, புதுப்பிக்கத்தக்க மின்சக்தித் திட்டங்களைத் தடுக்கவும், தாமதப்படுத்தவும், சுயநலம் கொண்ட சில குழுக்கள் முயன்று வருவதாகவும் இந்த அறிக்கையில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மீள் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி திட்டங்களை ஊக்குவிப்பதற்கும் அவற்றை முன்னே கொண்டு செல்வதற்கும் தேசிய சுற்றாடல் ஒன்றியம் உறுதியாக இருந்து வருகிறது. குறிப்பாக இலங்கையின் தற்போதைய நிதி நெருக்கடிக்கு மத்தியில், அவர்கள், உள்ளூர் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் ஆதரிப்பதற்கும் உறுதி பூண்டுள்ளதோடு, வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளனர்.

மன்னார் மற்றும் பூநகரிக்கு இடையில் 500 MW காற்றாலை மின்சக்தித் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளமை இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இந்த திட்டத்திற்கு பல்வேறு காரணங்களால் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். சுற்றுச்சூழல் பாதிப்பைத் குறைக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டால், இந்தத் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமென, தேசிய சுற்றாடல் ஒன்றியம் எதிர்பார்க்கிறது.

# "யமுத மச்சாங்" கிரிக்கெட் ரசிகர்களுக்கு Prima KottuMee இடமிருந்து அசத்தல் பாடல்




இலங்கை இளைஞர் யுவதிகளை எத்தருணத்திலும் உற்சாகப்படுத்திடும் *Prima KottuMee Hot N' Spicy* இந்த கிரிக்கெட் சீசனிலும் தனது புதிய பாடலான "யமுத மச்சாங், தினமு மச்சாங்.." மூலம் இளம் கிரிக்கெட் ரசிகர்களை மகிழ்விக்க தவறவில்லை.

இலங்கையரும் கொலிவூட்டின் பிரபல கலைஞருமான ரவி ரோய்ஸ்டர் இந்தப்பாடலை பாடி அசத்தியுள்ளார்.

கிரிக்கெட் இரசிகர்களை ஒன்று திரட்டி மகிழ்விக்கும் வர்த்தக நாமமான *Prima KottuMee* இன் உற்சாகமூட்டும் இந்தப் பாடல், கிரிக்கெட் மீதான ஆர்வத்தையும் நீண்டகால அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

இளைஞர்களின் ஆற்றல் மற்றும் உத்வேகத்துடன் தன்னை இணைத்துக்கொண்டு கிரிக்கெட்டின் ஒருங்கிணைந்த அங்கமாக இருப்பதில் *Prima KottuMee* பெருமிதம் கொள்கின்றது.

*Prima KottuMee* இளைஞர்களின் இதயத்துடிப்பினை பிரதிபலிக்கும் ஒரு அசல் வர்த்தகநாமமாக தன்னை நிலைநிறுத்தியுள்ளதுடன் தொடர்ந்தும் இந்த அர்பணிப்பு வலுவடையும் எனவும் உறுதியளிக்கிறது.

# பெரேரா அன்ட் சன்ஸ் அனுசரணையில் Hill Club Annual Open Ranking டென்னிஸ்

இலங்கையின் மிகப் பாரிய துரித பரிமாறல் சேவை உணவகச் சங்கிலியான பெரேரா அன்ட் சன்ஸ் பேக்கர்ஸ் *(Perera & Sons Bakers P&S)*, அண்மையில் இடம்பெற்ற *Hill Club Annual Open Ranking* டென்னிஸ் நிகழ்வுக்கு தொடர்ந்து 2வது ஆண்டாகவும் தனது அனுசரணையை வழங்கியுள்ளது. பாடசாலை மட்டத்திலான சுற்றுப் போட்டிகள் அடங்கலாக, டென்னிஸ், பட்மின்டன், மேசைப்பந்தாட்டம் மற்றும் ஏனைய விளையாட்டு நிகழ்வுகளுக்கு நீண்டகாலமாக ஆதரவளித்து வருகின்ற *P&S*, உலகளாவில் பரவிய தொற்றுநோய் காரணமாக பல ஆண்டு இடைவெளியின் பின்னர் கடந்த ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட *Hill Club Annual Open Ranking* டென்னிஸ் நிகழ்வுக்கான அனுசரணையை ஆரம்பித்திருந்தது.

பிரிவு 2 *(category 2)* சுற்றுப் போட்டியாக அமைந்துள்ள *Hill Club Annual Open Ranking* டென்னிஸ் நிகழ்வு, இலங்கையின் டென்னிஸ் நாட்காட்டியில் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்ற நிகழ்வுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக, 17 வகையான நிகழ்வுகளில் 700 க்கும் மேற்பட்டோர் மிகுந்த உற்சாகத்துடன் பங்குபற்றியதை காணக்கூடியதாக இருந்தது. முதல்முறையாக இந்தளவுக்கு பெருமளவான விண்ணப்பங்கள் நிகழ்வுக்கு கிடைக்கப்பெற்றிருந்ததுடன், இந்நிகழ்வு பிரபலமடைந்து வருவதையும் இது எடுத்துக்காட்டுகின்றது. இந்த ஆண்டு நிகழ்வுக்கு பெரும் எண்ணிக்கையான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்த நிலையில் தகுதிகாண் சுற்றுக்களும் மற்றும் முதலாவது சுற்றுக்கள் கொழும்பில் இடம்பெற்றதுடன், முக்கியமான ஆட்டங்கள் 2024 ஏப்ரலில் நுவரெலியாவிலுள்ள அழகிய *Hill Club Courts* திடலில் இடம்பெற்றன.



இந்நிகழ்வின் முக்கியத்துவம் மற்றும் விளையாட்டுக்கள் மீது *P&S* காண்பிக்கும் அர்ப்பணிப்பு ஆகியன தொடர்பில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் கிஹான் பெரேரா அவர்கள் கருத்து வெளியிடுகையில், "இலங்கையில் விளையாட்டுத்திறன் மற்றும் மகத்துவம் ஆகியவற்றை ஊக்குவித்து, சமூகங்களுக்கு ஆதரவளிப்பதில் எமது அர்ப்பணிப்பை இந்த அனுசரணை பிரதிபலிக்கின்றது. சமூகங்களை ஐக்கியப்படுத்தி, நபர்களுக்கு உத்வேகமளித்து, வாழ்வில் பெறுமதிமிக்க பாடங்களை உட்புகுத்துவதில் விளையாட்டுக்களின் வலிமை மீது நாம் நம்பிக்கை வைத்துள்ளமையே இதற்குக் காரணம். *Hill Club Annual Open Ranking* டென்னிஸ் நிகழ்வு போன்ற நிகழ்வுகளுக்கான கூட்டாண்மைகளினூடாக, அடுத்த தலைமுறை விளையாட்டு வீரர்களுக்கு உத்வேகமளித்து, விளையாட்டுத் திடலிலும், அதற்கு வெளியிலும் நீடித்து நிலைக்கும் பாரம்பரியங்களைத் தோற்றுவிக்கும் முயற்சிகளை நாம் முன்னெடுக்கின்றோம்.

# இலங்கையில் 'TASTE THE CURRENT பிரசாரத்தை ஆரம்பித்துள்ள STING®

*PepsiCo* நிறுவனத்தின் வர்த்தக நாமமான *Sting*, அதன் சமீபத்திய பிரசாரமான *'Taste The Current'* மூலம் இலங்கையில் உள்ள வாடிக்கையாளர்களை குறிப்பாக இளைஞர்களை உற்சாகப்படுத்த, வர்த்தகநாமத்தின் எண்ணக்கருவை உள்ளடக்கிய ஒரு உயிரோட்டமான புதிய வீடியோ பிரசாரத்தை முன்னெடுத்துள்ளது.



இந்த வீடியோவானது, *STING* ஐப் பருகுவதன் மூலம் நுகர்வோர் தமது தருணங்களை சக்தியுடன் கூடிய மின்மயமாகுமாறு ஆக்கபூர்வமாக கூறுகிறது. பழுதடைந்த கார் ஒன்றில் நெடுஞ்சாலை ஒன்றில் சிக்கித் தவிக்கும் பெண் ஒருவரை காண்பிக்கும் காட்சியுடன் இதன் கதை ஆரம்பமாகிறது. அவ்வழியே வரும் ஒரு இளைஞன் குறித்த பெண்ணுக்கு உதவி செய்யும் நோக்கில், அவளிடம் காரை மீண்டுமொரு முறை ஸ்டார்ட் செய்யுமாறு கூறுகிறான். கார் ஸ்டார்ட் ஆக மறுக்கும் நிலையில், அவன் தனது வாகனத்தில் இருந்த *Sting* போத்தல்கள் அடங்கிய குளிர்பானப் பெட்டியை எடுத்து, அதிலிருந்து ஒரு போத்தலை எடுத்து அவளை ஆச்சரியப்படுத்துகிறான். *STING* பானத்தின் ஒரு மிடறானது, கதாநாயகனை கலகலப்பான நடன அசைவுகளைச் செய்யத் தூண்டுவதன் மூலம், எவ்வாறான ஒரு அதிர்வை ஏற்படுத்துகிறது என்பதை ஆக்கபூர்வமாக இந்த வீடியோ விளக்குகிறது. புதிய ஆர்வத்தால் தூண்டப்பட்ட இளைஞன் அவனுக்குள் ஏற்படும் சக்தியை மின்சாரமாக காருக்கு கடத்துவதன் மூலம் காரை ஸ்டார்ட் செய்ய வைத்து, பெண்ணைக் ஆச்சரியப்படுத்துவதோடு, அவளுக்கு உதவியும் செய்கிறான். *'Taste The Current'* எனும் கோஷத்துடன், வர்த்தகநாமத்தின் மின்மயமாக்கும் அடிப்படையை ஆக்கப்பூர்வமாக வலியுறுத்துவதன் மூலம் இந்த விளம்பர வீடியோ நிறைவடைகிறது.

*Sting* பானத்தின் புதிய பிரசாரத்தின் வெளியீடு பற்றி கருத்துத் தெரிவித்த *PepsiCo* நிறுவனத்தின் இலங்கை பிராந்தியத்திற்கான இணைப் பணிப்பாளர் அனுஜ் கோயல், "*Sting* நுகர்வோரை உற்சாகமாக உணர வைத்து, உடலுக்கு புத்துணர்ச்சியை அளிப்பதோடு மட்டுமல்லாது, மனதுக்கு ஊக்கத்தையும் அளிக்கிறது. புதிய விளம்பர வீடியோவானது, *Sting* பானத்தின் உதவியுடன் ஒரு தருணத்தை மின்மயமாக்கும் ஒரு சுவாரசியமான மற்றும் வேடிக்கையான நிகழ்வை எடுத்துக் காட்டுகின்றது." என்றார்.

*STING* இலங்கையில் உள்ள அனைத்து நவீன மற்றும் பாரம்பரிய சில்லறை விற்பனை நிலையங்களிலும், முன்னணி இணைய வர்த்தகத் தளங்களிலும் ரூ. 120 எனும் விலையில் ஒரு முறை பருகும் 200 மில்லி லீற்றர் அளவிலான *PET* போத்தல்களாக கிடைக்கும்.

இது தொடர்பான மேலதிக தகவலுக்கு, *@stinglanka* மற்றும் *facebook.com/Stinglanka* பக்கங்களை தொடருங்கள.

# செலிங்கோ குடும்ப சவாரி வெற்றியாளர்களுக்கு ஒரு நாள் முழுவதும் மகிழ்ச்சி அனுபவம்

2024 ஆம் ஆண்டிற்கான செலிங்கோ லைஃப்பின் 'குடும்ப சவாரி' ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் சுமார் 1000 பேருக்கு பேர்ள் பே, தீம் பூங்காவில் குளிர்ச்சியும் பரவசமும் பொருந்திய நீர் அம்சங்களுடனான சூழலில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.



250 செலிங்கோ லைஃப் காப்புறுதிதாரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை உள்ளடக்கிய குழுவிற்கு, ஆயுள் காப்புறுதி சந்தையின் தலைவரால் பிரத்தியேகமாக நீர் பூங்கா பகுதி ஒதுக்கப்பட்டது.

குடும்ப சவாரி வர்த்தகநாம தூதுவர்களான பிரபல நடிகர் ரோஷான் ரணவன அவரது மனைவி குஷ்லானி மற்றும் அவர்களது மகன் மினெத் ஆகியோரும் இந்த மகிழ்ச்சிகரமான சூழலில் இணைந்து கொண்டனர்.

இந்த உல்லாச நிகழ்வின் ஆரம்பத்தில் உரையாற்றிய செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர்/பிரதம செயற்பாட்டு அதிகாரி திரு ரங்க அபேநாயக்க, 'தற்போது 17ஆவது வருடத்தை எட்டியுள்ள குடும்ப சவாரி பாரிய ஊக்குவிப்பு திட்டமானது இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையில் மிகப் பெரிய மற்றும் தாராளமான ஊக்குவிப்புத் திட்டமாக திகழ்கிறது. குடும்பங்கள் ஒன்றாக நேரத்தை செலவிடுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் இந்த திட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளது. குடும்ப சவாரியானது தற்போது பிரசார ஊக்குவிப்பு என்பதற்கும் மேலாக இலங்கை முழுவதும் உள்ள எங்கள் காப்புறுதிதாரர்களுக்கு வலுவான மற்றும் நீடித்த பிணைப்புகள் மற்றும் நினைவுகளை உருவாக்கியுள்ளதுடன் புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் மேம்படுத்துவதற்கு பங்களித்துள்ளது,' என்று அவர் கூறினார்.

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2024 ஜுன் 8 சனிக்கிழமை

# பங்களாதேஷுக்கு எதிரான தீர்க்கமான போட்டியில் இலங்கை இன்று களத்தில்



டி20 உலகக் கிண்ணத்தில் அடுத்த சுற்றுக்கு முன்னேறுவதற்கான தீர்க்கமான போட்டியில் இலங்கை அணி இன்று பங்களாதேஷை எதிர்கொள்ளவுள்ளது.

இம்முறை உலகக் கிண்ணத்தின் டி குழுவில் மூன்று முழு அங்கத்துவ நாடுகள் இடம்பெற்றிருக்கும் நிலையில் இலங்கை அணி தனது முதல் போட்டியில் தென்னாபிரிக்காவிடம் மோசமான தோல்வியை சந்தித்து. இதனால் சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறுவதற்கு இலங்கை அணி இன்றைய போட்டியில் வெற்றி பெறுவது கட்டாயமாகி உள்ளது.

இந்தக் குழுவில் மற்ற அணிகளாக நெதர்லாந்து மற்றும் நேபாள அணிகளே இடம்பெற்றபோதும் நெதர்லாந்து அணியிடம் இலங்கை பயிற்சிப் போட்டியில் தோல்வியை சந்தித்திருக்கும் சூழலில் அந்தப் போட்டியும் சவாலாகவே அமையும்.

பங்களதேஷ் தொடர்ச்சியாக டி20 சர்வதேச போட்டிகளில் பின்னடைவை சந்தித்து வந்த நிலையிலேயே இன்று உலகக் கிண்ணத்தின் முதல் போட்டியில் களமிறங்கவுள்ளது. உலகக் கிண்ணத்திற்கு முன்னர் அந்த அணி கத்துக்குட்டி அமெரிக்காவுடனான டி20 தொடரையும் இழந்தது.

வழக்கமாக இலங்கை மற்றும் பங்களாதேஷுக்கு இடையிலான போட்டிகளில் மைதானத்தில் கடும் பரபரப்பும் சர்ச்சைகளும் இடம்பெற்று வரும் நிலையில் இன்றைய தினத்தில் கூடுதல் அவதானத்துடன் ஆடுவது முக்கியமாகும்.

இலங்கை நேரப்படி இன்று காலை 6 மணிக்கு டலாஸ் மைதானத்தில் போட்டி ஆரம்பமாகவுள்ளது. இந்த மைதானத்தில் அமெரிக்கா மற்றும் கனடா அணிகள் ஆடிய முதல் போட்டியில் இரு அணிகளும் 190க்கும் அதிகமான ஓட்டங்களை சேர்த்தன. தொடர்ந்து நடந்த நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் நேபாள அணி 106 ஓட்டங்களுக்கே சுருண்டபோதும் இந்த மைதானம் துடுப்பாட்டத்திற்கு சாதகமானதாகவே உள்ளது.

எனவே தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி 77 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து செய்த தவறுகளை தவிர்ப்பது அவசியமாகும்.

இன்றைய தினம் நுவன் துஷார அல்லது மதீஷ பதிரணவுக்கு பதில் துஷ்மன்த சமீர அணிக்கு அழைக்கப்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

## பாகிஸ்தானிடம் அமெரிக்க அணிக்கு வரலாற்று வெற்றி



பாகிஸ்தானுக்கு எதிரான டி20 உலகக் கிண்ணத்தின் ஏ குழுவுக்கான போட்டியில் அதிர்ச்சி கொடுத்த போட்டியை நடத்தும் அமெரிக்கா சுப்பர் ஓவரில் வரலாற்று வெற்றி ஒன்றை பெற்றுள்ளது.

டலாஸில் நேற்று முன்தினம் (06) நடந்த இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணி நிர்ணயித்த 160 ஓட்ட வெற்றி இலக்கை துரத்திய அமெரிக்க அணி கடைசி பந்துக்கு வெற்றி பெற 5 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடி நிதிஷ் குமார் பௌண்டரி ஒன்றை விளாசியதால் ஆட்டம் சமநிலையானது.

இதனால் சுப்பர் ஓவருக்குச் சென்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அமெரிக்க அணி ஒரு விக்கெட்டை இழந்து 18 ஓட்டங்களை பெற்ற நிலையில் பாகிஸ்தானால் 13 ஓட்டங்களையே பெற முடிந்தது.

இதில் சுப்பர் ஓவரை வீசிய பாகிஸ்தானின் அனுபவ பந்துவீச்சாளர் மொஹமட் ஆமிர் மூன்று வைட்களை போட்டதோடு, அந்த அணியின் மோசமான களத்தடுப்பும் அமெரிக்காவுக்கு மேலதிக ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியின் பெரும்பாலான நேரங்களில் அமெரிக்காவின் கை ஓங்கி இருந்தது.

இந்நிலையில் இந்தப் போட்டியில் தோற்ற பாக். அணி சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேற போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அடுத்து நாளை (9) பாகிஸ்தான் அணி இந்தியாவை எதிர்கொள்ளவுள்ளது.

மறுபுறம் முதல் இரு போட்டியிலும் வெற்றியீட்டி இருக்கும் அமெரிக்கா அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை அதிகரித்துக் கொண்டுள்ளது.

# இந்தியா – பாக். மோதும் நியூயோர்க் ஆடுகளத்தை சீர்படுத்துகிறது ஐ.சி.சி.



நியூ யோர்க் நசாவ் கவுண்டி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் ஆடுகளத்தை விரைவாக மேம்படுத்துவதற்கான நடவடிக்கையை சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் (ஐ.சி.சி.) மேற்கொண்டுள்ளது.

நசாவ் மைதானத்தில் நடைபெற்ற இரண்டு போட்டிகளுக்குமான ஆடுகளங்கள் தரமற்றவை என்பதை ஐ.சி.சி. ஒப்புக்கொண்டுள்ளதுடன், அடுத்த போட்டிகளுக்காக ஆடுகளத்தை சரிசெய்வதற்கான முயற்சியில் களமிறங்கியுள்ளது.

ஆடுகளங்கள் தொடர்பில் ஐ.சி.சி. வெளியிட்டுள்ள அறிக்கையில், 'நசாவ் மைதானத்தின் ஆடுகளம் நாம் எதிர்பார்த்ததை போன்று சீராக அமையவில்லை.

இந்தியா மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான போட்டியின் பின்னர் உலகத்தரமான மைதான பராமரிப்பாளர்கள் அடுத்தடுத்த போட்டிகளுக்காக ஆடுகளங்களை தரமாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர்' என குறிப்பிட்டுள்ளது.

நியூ யோர்க் நசாவ் மைதானத்தில் நடைபெற்ற முதல் போட்டியில் இலங்கை அணி 77 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதுடன், இரண்டாவது போட்டியில் இந்திய அணி 97 என்ற வெற்றியிலக்கை அயர்லாந்து அணிக்கு எதிராக பெற்றிருந்தது.

ஆடுகளங்கள் துடுப்பாட்டத்துக்கு மிகவும் கடினமாக இருந்ததுடன், துடுப்பாட்ட வீரர்களுக்கு உபாதைகளை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. குறிப்பாக இந்திய அணியின் தலைவர் ரோஹித் ஷர்மா பந்து தாக்கியதால் களத்திலிருந்து வெளியேறியதுடன், ரிஷப் பண்ட் மற்றும் அயர்லாந்து அணியின் அன்ட்ரூ பெல்பேர்னி ஆகியோரை பந்து தாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# ஒன்பதாவது மாதத்தைத் தொட்ட காசா போரில் அகதி முகாம்கள் மீது இஸ்ரேல் குண்டு மழை



காசா போர் நேற்றுடன் (07) ஒன்பதாவது மாதத்தை எட்டிய நிலையில் இஸ்ரேலின் தாக்குதல்கள் காசா வெங்கும் நீடிப்பதோடு குறிப்பாக மத்திய காசாவில் குண்டு மழை பொழிந்து வருகிறது. மாத்திய காசாவில் உள்ள ஐ.நா. பாடசாலை ஒன்றின் மீது இடம்பெற்ற தாக்குதலில் அங்கு அடைக்கலம் பெற்றிருந்த பலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பின்னர் நேற்றும் அகதி முகாம்களை இஸ்ரேலிய போர் விமானங்கள் கடுமையாக தாக்கின.

இந்தப் போரினால் காசா முழுவதும் சின்னாபின்னமாக்கப்பட்டு ஆயிரக்கணக்கானோர் கொல்லட்டிருப்பதோடு அங்குள்ள 2.4 மில்லியன் மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர்.

கடந்த நவம்பரில் ஒரு வாரம் நீடித்த போர் நிறுத்தத்திற்குப் பின்னரான முதல் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கான இராஜதந்திர முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற போதும் அதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. ஒரு வாரத்திற்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்ட மூன்று கட்ட போர் நிறுத்தத்தை ஒட்டியே புதிய முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

என்றாலும் கடந்த 2007 தொடக்கம் காசாவில் ஆட்சி புரிந்து வரும் ஹமாஸ் அமைப்பு பைடனின் திட்டத்திற்கு இன்னும் பதிலளிக்கவில்லை. ஹமாஸ் அமைப்பை ஒழிக்கும் தனது போர் திட்டத்தை தொடர்ந்து வலியுறுத்திவரும் இஸ்ரேல், பேச்சுவார்த்தைகளுக்கான விருப்பத்தையும் வெளியிட்டு வருகிறது.

காசாவெங்கும் இஸ்ரேலின் தாக்குதல்கள் இடம்பெற்றபோதும் அது மத்திய காசாவில் தீவிரம் அடைந்துள்ளது. குறிப்பாக புரைஜ் மற்றும் மகாஸி அகதி முகாம்கள் மற்றும் டெயிர் அல் பலாவிலும் இஸ்ரேல் தரை மற்றும் வான் வழியாக தாக்குதல் நடத்தி வருகிறது.

இங்கு கடந்த வியாழக்கிழமை இரவு வீடு ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது ஆறு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். டெயர் அல் பலாஹ்வில் இருவர் கொல்லப்பட்டிருப்பதோடு புரைஜில் இடைவிடாது குண்டுகள் வீசப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக முன்னெச்சரிக்கை இன்றி சனநெரிசல் மிக்க பகுதிகள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது.



இவ்வாறு கடந்த வியாழனன்று நுஸைரத் முகாமில் உள்ள ஐ.நா. பாடசாலை ஒன்றின் மீது இடம்பெற்ற வான் தாக்குதல்களில் 40க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தாக்குதல் மக்கள் எதிர்கொண்டு வரும் பயங்கரத்திற்கு மற்றொரு உதாரணம் என்று ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் முழுமையாக வெளிப்படைத் தன்மையுடன் செயற்படும்படி இஸ்ரேலுக்கு வருடாந்தம் 3.8 பில்லியன் டொலருக்கு அதிகமான இராணுவ உதவியை வழங்கும் அமெரிக்கா கேட்டுள்ளது.

'இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் பெயர்கள் உட்பட இந்தத் தாக்குதல் தொடர்பில் மேலும் விபரங்களை வெளியிடப்போவதாக இஸ்ரேல் அரசு குறிப்பிட்டுள்ளது. அந்தத் தகவலைப் பகிரங்கப்படுத்துவதில் அவர்கள் முழுமையாக வெளிப்படைத்தன்மையுடன் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்' என அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் மத்தியூ மில்லர் தெரிவித்துள்ளார்.

எனினும் பாடசாலை மீதான தாக்குதலைத் தொடர்ந்தும் நுஸைரத் அகதி முகாமில் இஸ்ரேலின் பீரங்கி மற்றும் வான் தாக்குதல்கள் நீடித்ததாக அங்கிருப்போர் குறிப்பிட்டுள்ளனர்.

புரைஜ் அகதி முகாமில் உள்ள மருத்துவ மையம் ஒன்றுக்கு அருகில் இருக்கு இசா குடும்ப வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பலர் காயமடைந்ததாக அல் அக்ஸா தியாகிகள் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கில் காசா நகரில் உள்ள அல் சலாம் பள்ளிவாசலுக்கு அருகில் இருக்கும் அஷ்ரம் குடும்ப வீட்டின் மீது நடத்தப்பட்ட இஸ்ரேலின் ஏவுகணை தாக்குதலில் பலர் கொல்லப்பட்டிருப்பதாக அங்குள்ள பப்டிஸ் மருத்துவமனை குறிப்பிட்டது.

மகாசி முகாமில் உள்ள வப்தி வீட்டின் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக அல் அக்ஸா தியாகிகள் மருத்துவமனை வட்டாரத்தை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

மறுபுறம் எகிப்து எல்லையை ஒட்டிய தெற்கு காசாவின் ரபா நகரின் அல் சுல்தான் பகுதியை இலக்கு வைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின. காசாவில் கடல் மார்க்கமாகவும் இஸ்ரேலின் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. காசா நகரின் மேற்கு மற்றும் ஏனைய பகுதிகளின் மீன்பிடி துறைமுகத்தில் உள்ள வீடுகள் மீது இஸ்ரேலிய போர் கப்பல்கள் தாக்குதல் நடத்தின.

### போர் நிறுத்த முட்டுக்கட்டை

கடந்த ஒக்டோபர் 7 அன்று இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வெடித்த இந்தப் போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 36,731 ஆக அதிகரித்துள்ளது என்று காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் அதிகப் பெரும்பாலானவர்கள் பொதுமக்களாவர்.

குறிப்பாக கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 77 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 221 பேர் காயமடைந்திருப்பதாக அந்த அமைச்சின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் போரினால் இஸ்ரேல் மீதான இராஜதந்திர தனிமைப்படுத்தல்கள் அதிகரித்திருப்பதோடு அதற்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் போர் குற்றத்தில் ஈடுபட்டதாக வழக்கு விசாரணை இடம்பெற்று வருகிறது. பல ஐரோப்பிய நாடுகளும் பலஸ்தீன நாடு ஒன்றை அங்கீகரித்துள்ளன.

இதில் பலஸ்தீனத்தை அங்கீகாரித்த ஸ்பெயின், சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா தொடத்த காசாவில் பலஸ்தீனர்களுக்கு எதிரான 'இனப்படுகொலை' வழக்கில் பங்குதாரராக இணைந்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் எதிர்வரும் ஜூலை 24 ஆம் திகதி உரையாற்றுவதற்கு விடுத்த அழைப்பை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஒப்புக்கொண்டுள்ளார்.

இஸ்ரேலிய சிறையில் உள்ள பலஸ்தீனர்களுக்கு பகரமாக காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பது, காசாவுக்கான உதவிகள் செல்வது மற்றும் காசாவில் ஆறு வாரங்களுக்கு போர் நிறுத்தத்தை ஏற்படுத்தும் திட்டத்தை பைடன் ஒரு வாரத்திற்கு முன்னர் வெளியிட்டிருந்தார்.

இந்தத் திட்டத்திற்கு ஜி7 மற்றும் அரபு நாடுகள் ஆதரவு அளித்திருந்தன. இதனை ஏற்கும்படி பைடனுடன் 16 உலக நாட்டுத் தலைவர்கள் ஹமாஸை வலியுறுத்தி இருந்தனர். 'கால தாமதத்திற்கு நேரமில்லை. உடன்படிக்கையை ஏற்கும்படி நாம் ஹமாஸுக்கு அழைப்பு விடுக்கிறோம்' என்று வெளியிடப்பட்ட கூட்டு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான எதிர்பார்ப்பை வெளியிடும் வகையில் ஹமாஸ் அமைப்பிடம் இருந்து சாதகமான சமிக்ஞை கிடைத்ததாக எகிப்து உயிர்மட்டத் தரப்புகளை மேற்கோள்காட்டி அந்நாட்டின் அல் கஹேரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் பெய்ரூட்டில் இருக்கும் ஹமாஸ் மூத்த அதிகாரி ஒருவரான ஒசாமா ஹம்தான் இந்த முன்மொழிவை 'வெறுமனே வார்த்தைகள்' என்று குறிப்பிட்டுள்ளார். 'அமெரிக்கர்கள் இதுவரையில், பைடன் தனது உரையில் கூறியதை உறுதிப்படுத்தும் ஆவணப்படுத்தப்பட்ட அல்லது எழுதப்பட்ட எதையும் முன்வைக்கவில்லை' என்று அவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

போர் நிறுத்தத் திட்டம் தொடர்பில் ஹமாஸ் இன்னும் எந்த பதிலையும் அளிக்கவில்லை என்று கட்டார் வெளியுறவு அமைச்சு வியாழக்கிழமை குறிப்பிட்டிருந்தது.

இதில் காசாவில் இருந்து இஸ்ரேலியப் படை முழுமையாக வெளியேறி நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றை ஹமாஸ் கோரிவரும் அதே நேரம் இஸ்ரேல் அதனை நிராகரித்து வருவதோடு போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதில் பிரதான முட்டுக்கட்டையாக உள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜுன் மாதம் 8ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.